வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 08.01.2022 சனிக்கிழமை | இதழ் : 34 | பக்கங்கள் : 16

# இலங்கையுடனான நிதி நடவடிக்கையில் எச்சரிக்கையுடனுள்ள இந்திய வங்கிகள்!

## பிரபல இந்திய ஊடகம் வெளியிடும் தகவல்

கொழும்பு, ஜனவரி, 08

இலங்கையுடனான நிதி வர்த்தக நடவடிக்கைகள் குறித்து இந்திய வங்கிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் காணப்படுவதாக இந்தியாவின் ‘எக்கனமிக் ரைம்ஸ்’ நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

15

## அமைச்சர் பஸிலின் இந்திய விஜயம் ஒத்திவைக்கப்படும்?

*கொழும்பு, ஜன. 08*

*நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தமது இந்திய விஜயத்தை பிற்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது,*

*அமைச்சர் எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க்*

15

## 100,000 மெட்ரிக் தொன் அரிசி மியன்மாரிலிருந்து இறக்குமதி!



*கொழும்பு, ஜன. 08*

*உடன் அமுலாகும் வகையில் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை மியன்மாரில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.*

*இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வர்த்தக அமைச்சு மற்றும் மியன்மார் அதிகாரிகள் கைச்சாத்திட்டுள்ளனர். களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக இந்த அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

# இப்போதைய ஆட்சியை கவிழ்க்கவே முடியாது



## விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 08

“புதிய ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படப்போகிறது என்ற நிலைமை ஒன்று ஏற்படுமானால் பதவியில் இருப்பவர்கள் இராணுவ ரீதியாக நாட்டைக் கைப்பற்ற முனைவார்கள். ஆகவே இந்த ஆட்சியை கவிழ்க்க முடியாது.”, என்று கூறியிருக்கிறார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன்.

15

## நல்லிணக்கம் ஊடாகவே எமது பிரச்னைக்கு தீர்வு!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

*கிளிநொச்சி, ஜன. 08*

*“தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகத்தான் எங்களுடைய பிரச்னைகளுக்கு தீர்வை காண முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.*

*அரசாங்கத்தின் தேசிய கொள்கைக்கு அமைவாக பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நிகழ்விலேயே அவர்*

15

## தமிழில் உரையாற்ற முடியாமைக்கு வருந்துகிறேன் வெட்கமடைகிறேன்!

### கல்முனையில் கூறினார் டலஸ்



*கல்முனை, ஜன. 08*

*தமிழில் உரையாற்ற முடியாமைக்கு வருந்து கின்றேன் அதுமட்டுல்ல வெட்கமும் படுகின்றேன். தமிழில் பேசமுடியாமைக்கு நானோ அல்லது எனது பெற்றோர்களோ*

15

## எமது அரசு நிலையானது ஒருபோதும் வீழ்த்த முடியாது!

### ஜனாதிபதி கோட்டாபய



*கொழும்பு, ஜன. 08*

*“எமது அரசு நிலையான அரசு. உள்ளுக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் எவர் என்னதான் ஆட்டம் போட்டாலும் எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது.”*

*- இவ்வாறு ஜனா*

15



## 11 தமிழ் இளைஞர் கடத்தல்:

## உயர்நீதிமன்றம் முன்பாக உறவினர்கள் போராட்டம்!

*கொழும்பு, ஜன. 08*

*பதினொரு தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் சந்தேக நபரான முன்னாள் கடற்படை தளபதிக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யாமல் இருப்பதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்தமைக்கு*

15

## தடுப்பூசி மையங்களாகின்றன உள்ளூராட்சி நிறுவனங்கள்!

*கொழும்பு, ஜன. 08*

*“பூஸ்டர் தடுப்பூசியை விரைவாக வழங்குவதற்காக நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் தடுப்பூசி நிலையங்களாக மாற்றப்படும்”, என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அறிவித்துள்ளார்.*

*பூஸ்டர் தடுப்பூசிகளை வழங்கு வதை விரைவு படுத்தவும், இதற்காக ஒவ்வொரு கோட்டத்திலும் பல மையங்களைச் சேர்க்குமாறு பிராந்திய*

15

## கொரோனாவால் 16 பேர் மரணம்!

*கொழும்பு, ஜன. 05*

*கொரோனா தொற்றால் நேற்றுமுன்தினம் மட்டும் நாடளாவிய ரீதியில் 16 பேர் உயிரிழந்தனர்.*

*30 - 59 வயது பிரிவில் 2 ஆண்களும், 2 பெண்களுமாக நால்வரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 6 ஆண்களும், 6 பெண்களுமாக 12 பேரும்*

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கண் தெரியாத சிறுவன் ஒருவன் ஒரு கோவில் அருகில் யாசகம் செய்துகொண்டிருந்தான். அவன் அருகே "எனக்கு இரண்டு கண்களும் தெரியாது,தயவு செய்து தருமம் பண்ணுங்கள்" என்று எழுதி இருந்தது.

அந்த வழியில் போவோர் வருவோர் எல்லாம் அதை பார்த்து கொண்டே சென்றார்கள், யாரும் தருமம் பண்ணுவது மாதிரி தெரியவில்லை.

ஒரு நபர் தன்னுடைய பையில் இருந்து பணத்தை எடுத்து அவன் தட்டில் போட்டார். பின்னர் அங்கு வைத்திருந்த போர்டின் பின் பகுதியில் ஒரு வாசகத்தை எழுதி எல்லாரும் பார்க்கும்படி வைத்து விட்டு சென்று விட்டார்.

சிறிது நேரத்தில் அதை படிக்கும் அனைவரும் அவன் தட்டில் சில்லறையை போட ஆரம்பித்தனர்.

அந்தச் சிறுவன் என்ன எழுதி வைத்திருந்தானோ அதையே தான் அவரும் வேறு விதத்தில் எழுதி வைத்திருந்தார்.

"இன்றைய பொழுது நன்றாக விடிந்துள்ளது. ஆனால், என்னால் தான் அந்த அற்புதத்தை பார்க்க முடிய வில்லை" என்று எழுதியிருந்தார்.

இந்த வாசகத்தை படித்த அனைவரும் அவனுக்கு கண் தெரியாது என்பதைவிட நல்ல வேளை நமக்கு கண் இருக்கிறது நம்மால் எல்லாவற்றையும் கண்டு ரசிக்கமுடிகின்றது என்று இப்போது தருமம் செய்து விட்டு செல்கிறார்கள்.

ஒரு விடயத்தை சொல்கின்றபோது அதனைச் சொல்வது எப்படி என்பதிலும் நமக்கு அக்கறை இருக்க வேண்டும்.

அண்மையில் சில வாரங்களாக நமது அரசியல்பரப்பில் முக்கிய பேசுபொருளாக இருப்பது இந்தியப்பிரதமருக்கு தமிழ்பேசும் கட்சிகள் அனுப்ப முயன்றுவரும் கடித விவகாரம்தான்.

என்ன நடக்கிறது என்பதை அறிய, இந்த ஊர்க்குருவி, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுடன் நேற்று முன்தினம் தொடர்புகொண்ட போது அவர் பல விடயங்களை தெளிவுபடுத்தினார்.

ஒருவருக்கு நாம் கோரிக்கை கடிதம் எழுதுகின்ற போது, மிகச் சுருக்கமாகவும் ஆனால், நமது கோரிக்கையை அவர் நிறைவேற்றவேண்டும் என்று அவரைத் தூண்டுவதாகவும் இருக்கவேண்டுமே தவிர, நமது வித்துவத்தன்மையை காட்டுவதாக இருக்கக்கூடாது.

இந்தியப் பிரதமருக்கு நமது தலைவர்கள் அனுப்பவிருக்கின்ற கோரிக்கைக் கடிதம் ஒரு பகிரங்க ஆவணமாக மாறும் என்பது தெரிந்ததே. அவ்வாறு மாறுகின்றபோது, அந்த ஆவணத்தில் உள்ள எந்த ஒரு விடயமும் இந்தியாவிற்கு நெருக்கடியைக் கொடுக்கின்ற வாசகங்கள் அடங்கியதாக இருக்கக்கூடாது. ஒரு வசனம் கூட அந்த முயற்சியை கொடுத்துவிடலாம்.

சுருக்கமாக ஆனால், எல்லோரும் ஒற்றுமையாக கோரிக்கை வைக்கின்றபோது, இந்தியா நிச்சயமாக இவர்களை அழைத்து பேசும், அல்லது தனது சிறப்புத்தூதுவரையாவது அனுப்பி இவர்களுடன் பேசும். அப்போது வேண்டுமானால் நமது கோரிக்கைகளை விரிலாவாரியாக சொல்லலாம்.

அவரது விளக்கம் நியாயமானதாகவே இருந்தது.

கடைசியில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் தேசியக்கட்சிகள் மட்டும் இக்கடிதத்தில் கையொழுத்திட்டிருக்கின்றன. மனோ கணேசனும் ஹக்கீமும் தத்தமது மக்களின் அரசியல் கருதி அதிலிருந்து பின்வாங்கியிருக்கின்றனர். அது நியாயமானது தான்.

ஆனாலும் தமிழினம் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றது. ஆரம்பத்திலிருந்தே இந்த விவகாரத்தை கண்டுகொள்ளாமல் இருந்த தமிழ்அரசுக்கட்சி, இந்த முயற்சி வெற்றிபெற்றால் அது ரெலோவுக்கு பெயரெடுத்துக் கொடுத்துவிடும் என்று அதனைக் கண்டுகொள்ளாமலே இருந்தது. ஆனால், மனோவும் ஹக்கீமும் இதில் தலையை நுழைத்த பின்னர்தான் தமிழ்அரசு சற்று விழித்துக்கொண்டு தானும் கலந்து கொண்டது. இன்று அந்த விடயம் முற்றுப்பெற்றிருக்கின்றது. அந்த வகையில் அவர்கள் இருவருக்கும் தமிழினம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.!

**- ஊர்க்குருவி**

### இந்திய படகுகள் அத்துமீறல்

# இந்திய துணை தூதரகத்துடன் மீனவர் பிரதிநிதிகள் சந்திப்பு!



யாழ்ப்பாணம், ஜன. 08

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதரக பதில் தூணைத்தூதர் ராம் மகேஷை நேற்று சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது, இந்திய இழுவைப் படகுகள் தொடர்பான பிரச்சனைகள் பற்றிய மனு ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மருதடி வீதியிலுள்ள இந்திய தூணைத் தூதரகத்துக்கு சென்ற அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே, தலைவர் நிஹால் கலப்பதி, மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திர சேகர் ஆகியோர் இந்திய துணைத்தூதரக பதில் தூணைத் தூதர் ராம் மகேஷை சந்தித்து பேசினர்.

அவர்கள் கையளித்த மனுவில், சுமார் ஒரு தசாப்த காலமாக இலங்கையின் வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர் ஆக்கிரமிப்பு காரணமாக இலங்கையின் வடபகுதி மீன்பிடித் தொழில் முற்றாக சரிவடைந்துள்ளது. இந்நிலை காரணமாக வட பகுதி சுமார் ஐம்பதாயிரம் மீனவர்களும், அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களான சுமார் இரண்டு இலட்சம் பேரும் முகம்கொடுக்கும் நிலைமை மிகவும் கவலையானது.

இந்திய மீனவர்களின் செயல்பாட்டால் இந்நாட்டு மீனவர்களுக்கும், படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கும் ஏற்படும் அழிவு நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. அத்துடன், அவர்கள் பயன்படுத்தும் சட்டவிரோத இழுவை மடி முறை காரணமாக கடலின் அடிபரப்புச் சூழலுக்கு ஏற்படும் அழிவு பாரியதொன்றாகும்.

இந்நிலமை காரணமாக இந்நாட்டு மீன்பிடித் துறைக்கு ஒரு வருடத்திற்கு சுமார் 100 கோடி ரூபாயாகும்.

அத்துடன், கடல் சூழலுக்கு ஏற்படும் அழிவை எடைபோட முடியாது. இவ்விடயம் குறித்து எமது நாட்டு உரிய பொறுப்பு வாய்ந்தோருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறியத் தந்தாலும், கண்டனங்கள், ஆர்பாட்டங்கள், பேச்சு நடத்தியிருந்தாலும் ஆக்கபூர்வமான எவ்வித தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியாமற் சென்றுள்ளது. எனவே இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்

# குலசிங்கம் அப்பாக்குட்டி



பிறப்பு
23 - 01 - 1936

இறப்பு
04 - 01 - 2022

யாழ். உடுவில் Love Lane ஐப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் அப்பாக்குட்டி அவர்கள் 04.01.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், அப்பாக்குட்டி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், முத்துதம்பி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும்,அரியமலர் அவர்களின் அன்புக் கணவரும்,குலோத்பரன், விபுலன், அமலன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,தில்லைமலர், பவளராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தியாகராஜா, காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, தர்மலிங்கம், தங்கராஜா, ராசலிங்கம், காலஞ்சென்ற நாகேஸ்வரி, சந்திராதேவி, யோகராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கீதா, சுஜேதா, அனோசியா ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஷாகினி, நிதுன், கனீஷா, அட்ஷரன், செனீக்கா, ஏஞ் சலிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Get Direction
Saturday, 08 Jan 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Get Direction
Sunday, 09 Jan 2022 11:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham> ON L3R 5G1, Canada

தகனம்
Get Direction
Sunday, 09 Jan 2022 1:00 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**பரன்(மகன்)** : +14165766386
**விபுலன் (மகன்)** : +16475237628
**அமலன் (மகன்)** : +16478191193

தகவல்:
**பிள்ளைகள்**

Eelanadu
08.01.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 730 1370**

## தமிழருக்கான வாய்ப்புக்கள்?

இலங்கை தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. ஒருபுறம் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றன. மறுபுறம், பொருள் பற்றாக்குறையும் அதிகரித்துச் செல்கின்றது. இந்த நிலை தொடருமானால், நாட்டில் பஞ்சமும் ஏற்படலாம். இதற்கிடையில், எரிபொருளை இறக்குமதி செய்யப் போதுமான டொலர்கள் இல்லாது போனால், மக்கள் சைக்கிளில் செல்லும் தூரம் வரையில்தான் பயணம் செய்ய வேண்டிவரலாம் என்று - எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருக்கின்றார். ஏற்கனவே மக்கள், எரிவாயுவுக்காக நீண்ட வரிசையில் நிற்கின்றனர். இந்த நிலைமையை உற்று நோக்கும் போது, இந்த நிலைமையை விரைந்து சரிசெய்யாவிட்டால், நாடு ஒரு வங்குரோத்து நிலைக்குள் செல்லலாம்.

இந்த நிலைமை தமிழர்களுக்கு சாதகமான வாய்ப்புக்களை கொண்டு வரலாம் என்றும் சில அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக மேற்குலகு இந்த நெருக்கடியை பயன்படுத்திக் கொண்டு, இலங்கையின்மீது சில அழுத்தங்களை பிரயோகித்தால், நிலைமை தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையலாம் என்பதே சிலரின் கணிப்பு. குறிப்பாக, எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில் புதிய பிரேரணை ஒன்று வரலாம் - அந்த அழுத்தங்கள் இலங்கைக்கு மேலும் நெருக்கடிகளை கொடுக்கலாம். இந்த விடயங்களின் அடிப்படையில் அரசாங்கத்தை சில விடயங்களில் இறங்கிவரச் செய்யலாமென்று ஒரு நம்பிக்கை காணப்படுகின்றது.

நாடு நெருக்கடிக்குள் இருக்கின்றது. இலங்கைமீதான சாவதேச அழுத்தங்களும் வரத்தான் போகின்றன. ஆனால், இந்த நிலைமைகள் நமக்கு எந்தளவு சாதகமாக இருக்குமென்பதில் கேள்விகள் உண்டு. ஏனெனில், இலங்கை அரசை முற்றிலுமாகக் கைவிடும் வகையில் இந்தியாவோ, அமெரிக்காவோ செயல்பட வாய்ப்பில்லை. அவ்வாறு செய்தால், இரையுடன் காத்துக் கிடக்கும் சீனத் தூண்டிலில், கொழும்பு மிகவும் இலகுவாக சிக்கி விடும். பொருளாதார நெருக்கடிதான், இலங்கையின் பிரதான பிரச்னையாகும். இந்த நிலையில் இலங்கைக்கு இப்போது தேவைப்படுவது ஆதரவளிக்கும் கரங்களாகும். இதனை செய்வதற்கு சீனா தயாராகவே இருக்கின்றது. ஆனால், சீனாவின் கடனுக்குள் பாரதூரமாக சிக்கினால், அது எவ்வாறான விளைவுகளை தரும் என்பதற்கு, ஏற்கனவே சில ஆபிரிக்க அனுபவங்கள் இருக்கின்றன. இது அரசாங்கத்திற்கு சில முன்னெச்சரிக்கைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில்தான், இந்தியாவுடன் அரசாங்கம் சற்று நெருங்கிச் செல்ல முற்படுகின்றது. இந்தியாவுடன் பிணக்குகளில் இருந்த உடன்பாடுகளை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முயற்சிக்கின்றது. இந்த பின்புலத்தில்தான் மேற்கு கொள்கலன் முனைய உடன்பாடு முடிவுக்கு வந்தது. தற்போது, திருகோணமலை எண்ணெய் குதங்களுக்கான உடன்பாடு முடிவுக்கு வந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இலங்கையின் நெருக்கடிகளுக்கு இந்தியா உதவுமென்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார். இந்த விடயங்கள் அனைத்தையும் தமிழர் தரப்புக்கள் ஆழமாக உற்றுநோக்க வேண்டும்.

நமக்கு சாதகமாக இருப்பது போல் தெரிகின்ற அனைத்து விடயங்களும், எப்போது வேண்டுமானாலும் பாதகமாகிவிடக் கூடும். மேற்குலகின் மனித உரிமைகள்மீதான ஆர்வம், நமது பிரச்னையை சர்வதேச சூழலில் நூர்ந்து போகாமல் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், அதிலும் அளவுக்கதிகமான கற்பனைகள் நமக்குப் பயன்தராது. அங்கும் நிலைமைகள் நிரந்தரமானதல்ல. எப்போதும் நிலைமைகள் மாற்றமடையலாம். எனவே, இப்போது நாம் - தூண்டில்காரர்கள் போன்றுதான் சிந்திக்க வேண்டும். அதாவது, தூண்டிலில் இரையை குத்திவிட்டு, மீனுக்காக காத்திருக்கும் தூண்டில்காரரை போன்றே, எங்களை தயார்படுத்திக் கொண்டு, வாய்ப்புக்களுக்காக காத்திருக்க வேண்டும். எது அகப்படுகின்றதோ, அதனைப் பற்றி இழுத்து, நம் வசப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், வாய்புக்கள் எப்போது 9 எவ்வாறு கிடைக்கும் என்பதை நம்மால் கணிக்க முடியாது. தயார் நிலையில் இருப்பது மட்டும்தான் நாம் இப்போது செய்ய வேண்டியது. நமக்கிடையிலான ஐக்கியமான செயல்பாடுகள்தான், தயார்படுத்தலுக்கான முதல் படியாகும். முதல் படியில் சறுக்கினால், அதன் பின்னர் நமக்கென்று ஒரு பயணம் இருக்கப் போவதில்லை.

# வடக்கு - கிழக்கு தமிழ் கட்சிகளின் வரவேற்புக்குரிய இணைக்கப்பாடு!

**அலசுவது இராஜதந்திரி**



*இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் இலங்கையின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்க கோரி அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டுகின்ற கடித- ஆவணத்தில் ஒத்திசைவாக கையொப்பமிட வடக்கு - கிழக்கின் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் தற்போது இணங்கியுள்ளன.*

*ஓர் இழுபறி நிலையின் பின்னர், இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பது வரவேற்புக்குரியதாகவே இருக்கின்றது. ஓர் ஆவணத்தைக்கூட இழுபறியின்றி இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைப்பதில் தோன்றிய தாமதம் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் அரசியல் நிலைப்பாட்டை கேலிக்கூத்தாக்கி விட்டிருந்தது.*

*இருந்தபோதிலும் ஒரு பொதுவான பரந்துபட்ட அரசியல் தீர்வின் துரிதமான அமுலாக்கத்தை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தும் விதத்தில் தமிழ்கட்சிகள் முன்வந்திருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகவே இருக்கின்றது.*

*இத்தகைய ஒத்திசைவான நிலைப்பாட்டின் மூலம் வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்திருப்பது வரவேற்புக்குரியதாக இருப்பது ஒருபுறமிருக்க, இந்திய அரசும் தெளிவாக சிந்திக்கக்கூடிய சூழ்நிலையையும் உருவாக்கப்பட்டுள்ளதென்றே கருத முடிகின்றது. ஏனெனில், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றோடு ஒன்று முரண்பட்ட நிலைகாணமாக இந்திய அரசினால் வடக்கு - கிழக்கு அரசியல் நகர்வுகள் குறித்து தெளிவான போக்கை கொண்டிருக்க முடியாத நிலையே தோன்றியிருந்தது.*

*இந்திய இராஜதந்திரிகள் கூட இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒத்திசைவான போக்கையே எப்போதும் வலியுறுத்தி வந்திருந்தனர். எனவே, தற்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான கடித- ஆவணத்தை அனுப்பி வைப்பது தொடர்பாக எட்டப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் உடன்பாடு வெறுமனே கடித- ஆவணத்தை அனுப்பி விடுவதோடு மட்டும் நின்றுவிடலாகாது.*

*இந்தியா வடக்கு - கிழக்கு தமிழர்கள் தொடர்பாக கொண்டிருந்த சந்தேகங்களை அகற்றுவதாகவும் கடந்த காலங்களில் இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்கள் குறித்த கசப்புணர்வுகளை நீக்கும் விதத்திலும் இந்தியா குறித்த வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் அணுகுமுறைகள் இருக்கவேண்டியது காலத்தின் தேவையாகின்றது.*

*இந்தியா மற்றும் மேற்கத்தேய நாடுகளைப்பொறுத்தவரை இலங்கை தென்னாசியாவில் தற்போது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாகவே இருக்கின்றது. ஏனெனில், சீனாவின் வல்லாதிக்க விஸ்தரிப்பு இலங்கையை வெகுவாக உள்ளடக்கியதாகவே இருக்கின்றது.*

*சீனா ஏற்கனவே இலங்கையில் ஆழமாக காலூன்றியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் காணப்படுகின்றது. இதுதவிர, தென்னிலங்கையில் சீனாவின் மத்தள விமான நிலையம் மற்றும் சீனா அமைத்துள்ள துறைமுகம் என்பவையும் சீனாவின் இலங்கைமீதான மிக அழுத்தம் திருத்தமான பார்வையையே எடுத்துக்காட்டுகின்றது.*

*அண்மையில் கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள போருக்குப் பின்னரான நிலவரங்களை அறிந்திருந்தார். சீனத் தூதரரின் யாழ்ப்பாண விஜயம் குறித்து இந்தியா மட்டும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவில்லை. சீனாவின் நெருங்கிய நட்பு நாடாக இருக்கின்ற போதிலும் இலங்கைகூட சீனத்தூதுவரின் யாழ்ப்பாண விஜயத்தை சந்தேகக்கண்கொண்டு பார்த்ததை அறிய முடிகின்றது.*

*ஏனெனில், ஒரு வல்லரசு தனது சொந்த நலன்களுக்காக எதனையும் செய்ய முன்வரலாம். இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரச்சினை மீது தனது நலன்கள் தொடர்பாக சீனா கரிசனையை வெளிப்படுத்தினாலும் இலங்கையினால் பெரிதும் எதனையும் குறுக்கீடு செய்ய முடியாது.*

*இதுவிடயத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் "யார் குத்தியும் அரிசி ஆகட்டும்" என்ற ரீதியில் சீனா தொடர்பாக உயரிய இராஜதந்திரத்தோடு நடக்க வேண்டியதும் அவசியமானதாகின்றது.*


*ஆசியப் பிராந்தியத்தில் சீனாவின் வல்லாதிக்க விஸ்தரிப்பு தொடர்பாக மேற்குலக நாடுகள் தமது கரிசனையை வெளியிட்டுள்ள நாடாக தாய்வான் விளங்குகின்றது.*

*சீனப் புரட்சியையடுத்து சீனாவிலிருந்து வெளியேறியோரால் ஸ்தாபிக்கப்பட்டதே தாய்வானாகும். சீனாவை சீண்டும் விதத்தில் தாய்வானை மேறகத்தேய நாடுகள் கையாண்டு வருகின்றன. அத்துடன், சிறிய தாய்வானும் சீனாவுக்கு தனது தன்னாதிக்கத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அடிக்கடி தனது முப்படைகளின் ஒத்திகைகளை நடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.*

*எனவே, ஆசியப் பெரும்பிராந்தியத்தில் தூர கிழக்கே தாய்வான் சீனாவுக்கு சவால் மிகுந்ததாக இருக்கின்ற அதேசமயம் மற்றொரு தீவக நாடான இலங்கையை தன்வசப்படுத்த சீனா பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.*

*இந்நிலையில் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஆசிய பிராந்திய அரசியலையும் கவனத்திலெடுத்த நிலையில் தமது நகர்வுகளை மேற்கொள்ளும் பட்சத்தில் காத்திரமான அரசியல் தீர்வுகளை எட்ட முடியுமென்றே கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 08 சனிக்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 24
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : சஷ்டி




**மேடம்**
வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி இன்றைக்கு வரும். சமூகத்தில் உயர்மட்டத்தில் உள்ளோரின் நட்பு கிடைக்கும். தள்ளிப்போட்டுக்கொண்டே வந்த விஷயத்தை செய்து முடிப்பீர்கள்.

**இடபம்**
வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு நல்ல செய்தி தேடி வரும். சில விஷயங்களை அலைந்து திரிந்து நல்ல படியாக முடிப்பீர்கள். புதிய வேலை பற்றி இன்று நல்லதொரு தீர்மானம் எடுப்பீர்கள்

**மிதுனம்**
முதலீடு இலாபம் தரும். நினைத்ததை செய்து முடிப்பீர்கள். உங்களின் துணிச்சலால் முன்பு இருந்த பிரச்னை ஒன்று தீரும். பழைய கடன் தொல்லை முடிந்து நிம்மதி வரும்.

**கடகம்**
புதிய விஷயங்களில் ஈடுபடும் முன் அதிக கவனம் தேவை. பொது இடங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நெருங்கிய நபர்களுடன் வாக்கு வாதம் செய்ய வேண்டாம்.

**சிம்மம்**
மகிழ்ச்சி குறையாது. பணியிடத்தில் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். காத்திருந்ததற்கு நல்ல பலன் கிடைக்கும். மனைவியால் நன்மை உண்டு. குழந்தைகளிடம் அன்புடன் நடந்து கொள்வது நல்லது.

**கன்னி**
இனிமையான நாள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். பணிகளில் கவனத்துடன் செயல்படுங்கள். நேரம் விரயமாகும். குடும்ப ஒற்றுமை மேம்படும். தொழிலில் இருந்த போட்டி காணாமல் போகும்.

**துலாம்**
உங்களது துறையில் வளர்ச்சி காண்பீர்கள். உழைப்பு கூடும். எதிரிகள் மனம் மாறுவர். உறவினர்கள் உதவி செய்வர். மற்றவர்கள் வியந்து பாராட்டும்படி வாழ்வில் உயர்வீர்கள்.

**விருட்சிகம்**
கூடுதலாக உழைத்து குடும்பத்தினருக்கு ஆதரவு தருவீர்கள். நீங்கள் செய்த உதவிக்கு நன்றி தாமதமாகவே கிடைக்கும். தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள். புதிய துறையில் வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு**
வாழ்வில் முன்னேறுவதற்கான முயற்சிகளை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். மகிழ்ச்சி கூடும். உங்கள் மனதிற்கு பிடித்தவரின் விருப்பம் ஒன்று நிறைவேறும்.

**மகரம்**
குழந்தைகளின் நலனில் நிறைவான முன்னேற்றம் வரும். பணியிடத்தில் யாருடைய வம்புக்கும் போக வேண்டாம். நீண்ட நாளாக சந்திக்க விரும்பிய நபர் உங்களைத் தேடி வருவார்.

**கும்பம்**
கவலை தீரும். வாழ்க்கைத்துணைக்கு நன்மை நிகழும். அலுவலகத்தில் யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
சகிப்பு தன்மை அதிகரிக்கும். நினைத்த விஷயத்தை முடிப்பீர்கள். உங்களின் செயலுக்கு பாராட்டு கிடைக்கும். கலகலப்பான நாள். செலவு ஒன்று மகிழ்ச்சி தரும். புதிய பயணத்திட்டம் உருவாகும்.

# சசிகலாவுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கைஎடுக்காததுஎதற்காக?

## தி.மு.க. ஆதரவுள்ளது என்கிறார் ஜெயக்குமார்

சென்னை, ஜன. 08,

"தி.மு.க.வின் ஆதரவு இருப்பதால் தான் சசிகலா மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை" என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் தோழியான சசிகலா அ.தி.மு.க. கட்சி கொடியை பயன்படுத்தியதுடன் அக்கட்சியின் பொதுச் செயலர் என்ற பெயரில் அறிக்கை வெளியிடுகிறார். சசிகலா சட்டத்திற்கு விரோதமாக செயல்படுவதாக கூறி முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் சென்னை பொலிஸ் ஆணையாளரிடம் புகார் அளித்தார்.

பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால் சசிகலா மீது



நடவடிக்கை எடுக்க கோரி சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். மனு மீதான விசாரணை 12ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஜெயகுமார் கூறியதாவது:

"தி.மு.க.வின் ஆதரவு இருப்பதால் தான் சசிகலா மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர் தி.மு.க.வின் மற்றொரு குழுவாக ஆக இருக்கலாம்.

அம்மா கிளினிக்கை பொறுத்தவரை தேவையான மருத்துவர்களை நியமனம் செய்திருந்தோம். சென்னையில் பல்வேறு இடங்களில் நானே திறந்து வைத்துள்ளேன். அமைச்சரிடம் காண்பிக்க தயார். அவர் என்னோடு வருவாரா?

"அரசர்கள் மாறுவேடத்தில் செல்வது போல் முதல்வர் ஸ்டாலின் ரேஷன் கடைகளுக்கு மாறு வேடத்தில் செல்ல வேண்டும். அங்கு பொது மக்கள் அரசை எப்படி எல்லாம் பேசுகின்றனர் என்று அவர் தெரிந்து கொள்ள வேண்டும்" என ஜெயகுமார் கூறினார்.

# தமிழகத்தில் எந்த அம்மா உணவகமும் மூடப்படாது

## சட்டமன்றத்தில் முதலமைச்சர் உறுதி

சென்னை, ஜன. 08,

தமிழகத்தில் எந்த அம்மா உணவகமும் மூடப்படக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை கூட்டத் தொடரின் 3 வது மற்றும் கடைசி நாள் கூட்டமானது சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அப்போது பேசிய எதிர்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அம்மா மினி கிளினிக்குகளை மூடியுள்ளனர் என்றும், அம்மா உணவகம் முன்னோடி திட்டமாக உள்ளநிலையில் அதை மூடினால் என்ன என்று அமைச்சர் துரைமுருகன் பேசியது வேதனை அளிப்பதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, சட்டசபை



யில் சென்னை மாநகர காவல் சட்ட முன்வடிவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

அப்போது பேசிய அவர், "நீட் தேர்வு விலக்குக்கு ஆதரவளிக்கும் அ.தி.மு.க.விற்கு நன்றி. தமிழகத்தில் எந்த அம்மா உணவகமும் மூடப்படக்கூடாது என்பது தான் என்னுடைய எண்ணம். ஜெயலலிதா நினைவிடம் பொதுப்பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அம்மா உணவகம் மூடப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளேன். எனவே, அம்மா உணவகம் மூடப்படாது என்பதை எதிர்க்கட்சி தலைவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இதுவரை 8.76 கோடி கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின் கொரோனா தடுப்பூசி செலுத்தும் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு உள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை 5 மாதங்களில் நிறைவேற்றியுள்ளோம். மக்களிடையே தி.மு.க. அரசு மீது அவநம்பிக்கை ஏற்படவில்லை. அனைத்து அரசு பள்ளிகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் திட்டம் செயல்படுத்தப்படும். இன்னுயிர் காப்போம் திட்டம் மூலம் இதுவரை 5,274 பேர் பயன் பெற்றுள்ளனர்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்க இருந்த பொங்கல் விழா ஒத்திவைப்பு

மதுரை, ஜன. 08,

கொரோனா, ஒமைக்ரோன் பரவல் அதிகரிப்பு காரணமாக, மதுரையில் 12ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க இருந்த பொங்கல் விழா தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

ஒமைக்ரோன் பரவல் அதிகரித்து வரும் நிலையில் மதுரையில் 12ஆம் திகதி நடைபெற இருந்த பிரதமர் மோடி பங் கேற்க இருந்த பொங்கல் விழா தள்ளிவைக்கப்பட்டுள்ள தாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கூறினார்.

பஞ்சாப்பில் பிரதமர் மோடிக்கான பாதுகாப்பு குளறுபடியை கண்டித்தும், அந்த மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் அரசை கண்டித்தும் மதுரையில் பா.ஜ.க. சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஊர்வலம் நடந்தது.

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் கட்சி நிர்வாகிகள் இந்த ஊர்வலத்தில் திரளாக கலந்து கொண்டனர். இந்த ஊர்வலம் தல்லாகுளம் அவுட் போஸ்ட் பகுதியில் இருந்து தமுக்கம் மைதானம் தமிழன்னை சிலை வரை சென்றது. முன்னதாக அண்ணாமலை நிருபர்களிடம் கூறியதாவது:-

"விருதுநகர் மாவட்டத்தில் மருத்துவ கல்லூரி திறப்பு விழா நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்துகொள்வதற்காக வருகிற 12ஆம் திகதி தமிழகம் வருவதாக மாநில அரசு அறிவித்திருந்தது. அதே சமயத்தில் பா.ஜ.க. சார்பில் மதுரையில் பொங்கல் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுகுறித்து பிரதமர் அலுவலகத்திற்கும் தகவல் தெரிவித்திருந்தோம்.

"ஒமைக்ரோன் பரவல் அதிகமாவதால், பிரதமர் கலந்து கொள்ளவதாக இருந்த 'நம்ம ஊர் பொங்கல்' நிகழ்ச்சி மாநில அரசின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடத்த வேண்டாம் என முடிவு செய்துள்ளோம்.

"அதன்படி, மதுரையில் மோடி கலந்து கொள்ள இருந்த நிகழ்ச்சி தள்ளிவைக்கப்படுகிறது. இது தமிழக பா.ஜ.க. தலைவர்கள் பேசி எடுத்து கொண்ட முடிவு. பிரதமரை அழைத்து வரும்போது மிகுந்த கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காக எடுத்த முடிவு. மதுரை நகரில் பிரதமர் மோடி கலந்து கொள்ளும் வகையில் மற்றுமொரு நிகழ்ச்சி விரைவில் நடத்தப்படும்" - என்று அவர் கூறினார்.

# நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு விமான நிலையத்திலேயே தடுப்பூசி!

கொழும்பு, ஜன. 08
வெளிநாடுகளில் இருந்து வரும் இலங்கையர்கள் இது வரை கோவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்ளதவர்களாக இருந்தால் அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்தே தடுப்பூசி போடும் வேலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விமான நிலையத்தில் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் தடுப்பூசி மையம் விமானப்படை யினரால் அமைக்கப்பட்டுள்ளது.

நாடு திரும்பும் இலங்கையர்களின் தடுப்பூசி நிலையைக் கருத்தில் கொண்டு முதலாவது, இரண்டாவது மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகள் விமான நிலையத்தில் வைத்து வழங்கப்படும் என இலங்கை விமானப் படையின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)




# கொக்குவிலில் திருடர் குழுவை மடக்கிப்பிடித்தனர் ஊரவர்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 08
கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்களில் இருவர் அயலவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு 09.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்தவேளை மூவர் அடங்கிய திருட்டுக்கும்பல் புகுந்துள்ளது.

அதனை அவதானித்த அயலவர்கள் குறித்த வீட்டை வெளியில் சுற்றிவளைத்து மூன்று திருடர்களையும் மடக்கிப் பிடிக்க எத்தனித்தபோது ஒருவர் தப்பியோடிய நிலையில், இருவர் சிக்கிக்கொண்டனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட இருவரும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (அ-03)

# இன்று கொழும்பு வருகின்றார் சீன வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஜன. 08
உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ இன்று சனிக்கிழமை இலங்கை வருகின்றார்.

கொழும்பு வரும் அவர் முக்கியத்துவமிக்க சில சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர்களுடன் அவர் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தல்



மற்றும் இலங்கையில் சீனாவின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)





## இந்திய மீனவரின் அத்துமீறலை கண்டித்து

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன் கடற்றொழிலாளர் மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 08

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாக வீதியை மறித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினரும், மாதகல் பிரதேச கடற்தொழிலாளர்களும் இணைந்து நேற்று காலை குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்திய இழுவைமடி தொழிலை நிறுத்தும் வரை போராடுவோம், இந்திய அரசு வடக்கு மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்க கோருகிறோம், எமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்துவோம் போன்ற கோஷங்களை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வீதியை மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையால் , அவ்வீதி வழியூடான போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது. பொலிஸார் அங்கு வந்து போராட்டகார்களை வீதியோரமாக நின்று போராடுமாறு பணித்தனர்.

இதனால் கோபமடைந்த மீனவர்கள், கடலில் அயல் நாட்டவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க முடியவில்லை சொந்த நாட்டு மக்களை அடக்க முயல்கிறீர்களா ? ,எங்களுடன் கடலுக்கு வாருங்கள்-அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை காண்பிக்கிறோம். முடிந்தால் அவர்களை கைது செய்யுங்கள் எனக் கூறி பொலிஸாரின் பணிப்பை புறம் தள்ளி வீதியில் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் குறித்த போராட்டத்தை முன்னெடுத்த பின்னர் உதவிப் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றை கையளித்து தமது போராட்டத்தை முடித்தனர். (அ-03)

# தனித்து போட்டியிட்டிருந்தால் சு.க. படுதோல்வி கண்டிருக்கும்

## கூறுகிறார் திஸ்ஸ குட்டியாராச்சி



கொழும்பு, ஜன. 08
பொதுத்தேர்தலில் தனித்து போட்டியிட்டிருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வி அடைந்திருக்கும் என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

தமது கட்சி வாக்கால்தான் மொட்டு கட்சி வெற்றி பெற்றதென சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அறிவித்து வருகின்றனர். உண்மை அதுவல்ல. மொட்டுக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற வாக்குகளால்தான் சுதந்திரக்கட்சியினர் கரைசேர்ந்தனர். தனித்து போட்டியிட்டிருந்தால் ஒருவர்கூட பாராளுமன்றம் வந்திருக்கமுடியாது. இதனை மைத்திரிபால சிறிசேன மறந்துவிட்டார்.

எனவே, சுதந்திரக்கட்சி இல்லை என்பதற்காக மொட்டு கட்சி ஆட்சி கவிழாது-என்றார். (அ)

# வவுனியாவில் அதிக பனி மூட்டம்

வவுனியா, ஜன. 08
வவுனியாவில் நேற்று காலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டதால் சாரதிகள் வாகனங்களைச் செலுத்துவதில் பெரும் இடையூறுகளைச் சந்தித்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், வாகனச்சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஏ-9 வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 7.30 மணிவரை ஒளியைப் பாய்ச்சியபடி சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அண்மைக்காலமாக மழையுடன் கூடிய காலநிலை வவுனியாவில் காணப்பட்டபோதிலும் தற்போது அதிக பனி மூட்டமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# தேனிலவுக்கு கொழும்பு வந்து ட்ரோன் பறக்கவிட்ட இந்திய தம்பதியர் கைது!

கொழும்பு, ஜன. 08
இலங்கையில் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் அனுமதியின்றி, ட்ரோன் கமெராவை பறக்கவிட்டு புகைப்படம் மற்றும் காணொலி காட்சிகளைப் பதிவு செய்த இந்திய தம்பதியினர் வெலிகம பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர், நேற்று முன் தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இதன்போது அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

அவர்கள் பதிவு செய்த காணொலி மற்றும் எடுத்த படங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதால் அவர்களை விடுவிப்பதற்கும் உத்தரவு வழங்கப்பட்டது.

இந்தியாவின் ஹைதராபாத் பகுதியில் இருந்து தேனிலவுக்காக இலங்கை வந்த தம்பதியினருக்கே இந்நிலைமை ஏற்பட்டது.(அ)



## வவுனியா வைத்தியசாலைக்கென சஜித் இரத்த சுத்திகரிப்பு தொகுதி வழங்கினார்

வவுனியா, ஜன. 08

வவுனியா வைத்திய சாலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் இரத்த சுத்திகரிப்பு தொகுதி கையளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித்தலைவரின் வடக்குக்கான விஜயத்தின் முதற்கட்டமாக நேற்று வவுனியாவுக்கு சென்ற அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் மூச்சு செயல் திட்டத்தின் ஊடாக வவுனியா வைத்தியசாலைக்கு 24 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரத்த சுத்திகரிப்புத் தொகுதியை கையளித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ உபகரணத்தொகுதிகளில் 35 ஆவது வைத்தியசாலையாக வவுனியா வைத்தியசாலைக்கு குறித்த உபகரணம் வழங்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. ராகுலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், புத்திக பத்திரண, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் உமா சந்திர பிரகாஸ், வன்னி மாவட்ட அமைப்பாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு வைத்தியசாலையினால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. (அ)

# இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு ஆதரவு

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு




**புதுடில்லி, ஜன. 08**

**கடினமான சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், புத்தாண்டை முன்னிட்டு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கில் இலங்கை வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை தாம் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணுவதற்கு இணங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதற்காக, இரண்டு நாடுகளுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் இரு தரப்பு வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடனுதவியை நீடிப்பது குறித்து, தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ், இலங்கையை முக்கியமான தரப்பாகக் கொண்டு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். (அ)

## யானையின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜன. 08

ஹெப்பிட்டிபொலாவை பகுதியில் காயமடைந்த நிலையில் காட்டு யானையின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

10 வயது மதிக்கத்தக்க யானையின் சடலமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அனுராதபுரம் பிரதேசத்திற்கு பொறுப்பான வனவிலங்கு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



## யாழ்.நகரில் காஸ் சிலிண்டர்களை கொள்வனவு செய்ய நீண்ட வரிசை!

யாழ்ப்பாணம், ஜன. 08

யாழ்ப்பாண நகரில் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

நேற்று காலை முதல் யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிப் பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலைக்கு முன்பாக வெற்று சிலிண்டர்களுடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதன்போது, முதல் வருகைதரும் 300 பேர்களுக்கு மட்டும் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படும் என்ற பதாதை காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## “எனது மகன் தடுப்பூசி பெற்றுள்ளான் உங்கள் பிள்ளைகளுக்கும் போடுங்கள்”

### மருத்துவர் சந்திம ருவிட்டரில் விழிப்புணர்வு பதிவு

கொழும்பு, ஜன. 08

இலங்கையில் 12 வயது முதல் 15 வயது வரையான பாடசாலை மாணவர்களுக்கு கோவிட் தடுப்பூசி போடும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

உங்கள் பிள்ளைகளுக்கும் தடுப்பூசிகளை தயங்காமல் போட்டுக் கொள்ளுங்கள் என ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை, மூலக்கூறு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர கோரியுள்ளார்.




தனது மகன் பாடசாலையில் இன்று(நேற்று) தடுப்பூசி பெற்றுக்கொண்ட புகைப்படத்தை தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், என் மகன் அவனது பாடசாலையில் தடுப்பூசி பெற்றுக்கொண்டான். உங்கள் பிள்ளைகளுக்கும் தடுப்பூசியை தயங்காது பெற்றுக் கொடுங்கள் என பெற்றோரைக் கோரியுள்ளார்.

தடுப்பூசி போட்டுக் கொள்வது பாடசாலைகளை மூடாமல் இருக்கவும் மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படாமல் இருக்கவும் உதவும். எங்கள் குழந்தைகளும் அவர்களின் கல்வியும் எங்களின் முன்னுரிமையாக இருக்கவேண்டும் எனவும் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். (அ)

## பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புள்ள 4 சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 08

சுன்னாகம் பொலிஸ் பிரதேசம் மற்றும் கொடிகாமம் பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் விசேட புலனாய்வு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் உடுவில் பகுதியைச் சேர்ந்த 22, 24 மற்றும் 26 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி கொடிகாமம் பொலிஸ் பிரதேசத்துக் குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதேபோல் கடந்த வருடம் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி உடுவில் அம்பலவாணர் வீதிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்து அங்குள்ள வீட்டின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் குறித்த திருடப்பட்ட இருந்த மோட்டார் சைக்கிள் பயன்படுத்தப்பட்டமை தெரியவந்தது.

அதேபோல் கடந்த வருடம் அம்பலவாணர் வீதி, உடுவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இந்த சந்தேக நபர்களுக்கு தொடர்புள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

## பாணை பெறவும் இனி வரிசை!

### காத்திருக்கின்றது அடுத்த நெருக்கடி

கொழும்பு, ஜன. 08

அடுத்துவரும் நாட்களில் நாட்டில் பாணுக்கும் தட்டுப்பாடு ஏற்படும். அதனை பெறவும் மக்கள் வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்று அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

“நாட்டில் தற்போது பேக்கரிகளுக்கு 50 வீதமான கோதுமைமாவே வழங்கப்படுகின்றது. இதனால் மூன்று அல்லது நான்கு நாட்கள்தான் வெதுப்பகங்களில் வேலை நடக்கின்றது.

அடுத்துவரும் நாட்களில் பாணுக்கு தட்டுப்பாடு ஏற்படும். வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படும்.

டொலர் இருந்தால் போதுமானளவு மாவை வழங்கமுடியும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இந்த பிரச்னையை அரசு தீர்க்க வேண்டும்.”-என்றும் மேற்படி சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)

ஈழநாடு



# இராணுவ ஆட்சிக்கு செல்லும் எண்ணம் அரசிடம் கிடையாது

## வவுனியாவில் கூறினார் சஜித்



வவுனியா,ஜன.08

**நாட்டை இராணுவ ஆட்சிக்கு கொண்டு செல்வது தொடர்பான எண்ணம் இந்த அரசிடம் இருக்கும் என நான் எண்ணவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தி என்பது நாட்டில் இதுவரை இல்லாத பொது அரசியல் அத்தியாயத்தை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. டீல் அரசியல் கலாசாரத்தை இல்லாமல் செய்து நாட்டின் எதிர்காலத்துக்கும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குமான அமைப்புதான் இது. இது தனி நபருக்கானதோ அல்லது ஒரு இனத்துக்கானதோ அல்ல. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல விரும்புபவர்கள் அனைவரும் இணைந்து பயணிக்கின்றார்கள். ஊழல், கொள்ளைகள் இல்லாத ஒரு அரசாங்கத்தை உருவாக்குவது எமது நோக்கம். மத்திய வங்கி கொள்ளையில் ஈடுபட்டவர்கள் எவ்வாறு எம்மோடு இணைய வருவார்கள்.

சுசில் பிரேமஜயந்தவை பதவி நீக்கிய விடயமானது, தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போன்ற வேலை. மக்கள் இந்த அரசாங்கத்துக்கு கொடுத்த வாய்ப்பைச் சரியாக பயன்படுத்தவில்லை. முழுவதும் கண்துடைப்பாகச் செய்கிறார்கள். இதனை மாற்றவேண்டும். இதற்கு புதிய மக்கள் சக்தியை உருவாக்க வேண்டும். அதற்கான வாய்ப்பை மக்களுக்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கில் எம்மால் கடந்த அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டமானது மக்களின் பங்களிப்புடன் கூடியதாகவே ஆரம்பிக்கப்பட்டது. இதனை நாம் நடைமுறைப்படுத்தினோம். தற்போதைய அரசாங்கம் கொள்ளையடிப்பதில் தான் குறியாக இருக்கிறது. இதனால் மக்களுக்கு எப்படி வீட்டுத் திட்டத்தை அவர்களால் வழங்க முடியும். நாம் இந்த நாட்டின் ஜனாதிபதியாகி இந்த மக்களின் வீட்டு திட்ட பிரச்னைக்கு நிரந்தர தீர்வை வழங்குவேன் என உறுதியளிக்கின்றேன்.

மேலும், ஊடகம் என்பது ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக இருக்கும் மிகப்பெரிய சக்தி என நான் நம்புகின்றேன். மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவது ஊடகவியலாளரின் கடமை. இவ்வாறு உண்மைகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்கள் பலர் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளார்கள். அவ்வாறு பாதிப்படைந்த அல்லது உயிரிழந்த ஊடகவியலாளர்களுக்கு நாம் ஆட்சிக்கு வந்ததும் அரசாங்கம் என்ற வகையில் எம்மால் முடிந்த சலுகைகளை பெற்றுக் கொடுப்போம்.

ஐக்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாட்டுக்கான பயணம் தொடர்கிறது. இந்த பயணத்தில் வடக்கு அரசியல், தெற்கு அரசியல் என்று இல்லை. இதில் எந்த வித பிரிவினைகளும் கிடையாது. இலங்கை என்பது ஒரு நாடு. நாம் அதன் பிரஜைகள் என்ற அடிப்படையில் தான் பணியாற்றுவோம். மக்களது பிரச்னைகளை நாம் கட்டம் கட்டமாக செய்வோம். இதில் எந்தவித வேறுபாடும் கிடையாது.

இராணுவ வழிநடத்தல் அல்லது இராணுவத்தின் தலைமைத்துவம் என்பது இராணுவத்துக்கு தான் பொருத்தம். எமது நாடு ஜனநாயக நாடு. ஜனநாயக நாட்டை வழிநடத்துவதற்கும், கொண்டு செல்வதற்கும் தேவையானது ஜனநாயக ரீதியலான தேர்தலும், மக்களின் வாக்குகளும், அதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும்தான். நாட்டின் ஆட்சியில் இராணுவ வழிநடத்தல் என்பது தேவையில்லாதது. இது சம்பந்தமாக என்னிடம் மேலதிகமாக கேட்கவேண்டாம். இந்த அரசாங்கத்துக்கும் நாட்டை இராணுவ ஆட்சிக்குக் கொண்டு செல்வது தொடர்பான எண்ணம் இருக்கும் என நான் எண்ணவில்லை.

நாட்டுக்குள் எந்தவித பிரச்னைகளும் இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது. எனது கட்சி ஆட்சியமைக்கும் பட்சத்தில் இன, மத பிரிவினைகள் ஏற்பட இடமளிக்கவிட மாட்டோம். நாம் ஒரு நாட்டு தாயின் பிள்ளைகளாக இருப்போம். இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். எந்த ஒரு இனத்துடனும், மதத்துடனும் முரண்பட முடியாது-என்றார். (அ)





# யாழ். கட்டளைத் தளபதி அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 08

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனுக்கும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் (காணி) மற்றும் உதவி மாவட்ட செயலர் திருமதி எஸ்.சி.என்.கமலராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் பொதுவான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் மக்களின் முன்னேற்றம் கருதி பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் கொரோனா இடர் காலத்தில் மக்கள் நலனுக்காக இணைந்து செயற்பட்டமைக்காக மாவட்ட அரச அதிபர் தனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

மக்களின் முன்னேற்றம் கருதி அபிவிருத்திக்காக தங்களாலான முழுமையான ஒத்துழைப்புக்களை தொடர்ந்து வழங்கத் தயாராக இருப்பதாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

(அ-03)

# வெலிக்கடை கைதிகளுக்கும் தர்மாசிரியர் பரீட்சை நடக்கும்

கொழும்பு, ஜன. 08

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதிகள் குழுவொன்று ஜனவரி 09 மற்றும் 15 ஆம் திகதிகளில் தர்மாசிரியர் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கோவிட் - 19 அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஆண்டு நடைபெறவிருந்த தேர்வு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதன்படி, வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள சுசரிதோதய அறநெறி பாடசாலையும் பரீட்சை நிலையங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டுள்ள து.இம்முறை 04 கைதிகள் பரீட்சை எழுதவுள்ளனர்.

கைதிகளை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றும் நோக்கில் அனைத்து சிறைச்சாலைகளிலும் அறநெறிப் பாடசாலை கல்வி வழங்கப்பட்டு வருவதுடன், சிறை அதிகாரிகளும் வெளி ஆசிரியர்களும், தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்த கைதிகளும் ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றமை குறிபிப்பிடத்தக்கது.

(அ)

# வவுனியா பாரதிதாசன் வித்தியாலயத்தில் ‘ஸ்மார்ட்’ வகுப்பறையை திறந்துவைத்தார் சஜித்

வவுனியா, ஜன. 08

வவுனியா மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவினால் ஸ்மார்ட் வகுப்பறை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நவீன உலகில் வளமான டிஜிற்றல் எதிர்காலத்துக்காக இளைய தலைமுறையை தொழில்நுட்ப தேர்ச்சி பெற்ற சமூகமாக கட்டியெழுப்ப எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவில் உருவான ஸ்மார்ட் வகுப்பறை திட்டத்தின் கீழ் 7.5 இலட்சம் ரூபாய் செலவில் இந்த வகுப்பறை அமைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், புத்திக பத்திரண, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் உமா சந்திர பிரகாஸ், வன்னி மாவட்ட அமைப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# ஒப்பந்தம் கைச்சாத்துக்கு இந்திய தூதரகம் பாராட்டு

கொழும்பு, ஜன. 08

திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதி அபிவிருத்திக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமைக்கு இலங்கைக்கான இந்திய தூதரகம் தனது நன்றியை தெரிவித்துள்ளது.

“இந்திய-இலங்கை பொருளாதார மற்றும் சக்தி பங்குடைமையில் புதியதோர் மைல் கல். திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதி அபிவிருத்திக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமைக்காக சகல தரப்பினருக்கும் வாழ்த்துக்கள்“ என அது தெரிவித்துள்ளது.

“இந்திய- இலங்கை தலைமைத்துவங்களின் வழிகாட்டல்களுக்கும் அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆதரவுக்கும் உளப்பூர்வமான பாராட்டுக்கள்” என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

# 69 இலட்சம் அமெரிக்க டொலர்களை சீன உர நிறுவனத்துக்கு வழங்கிய அரசு

கொழும்பு, ஜன. 08

சர்ச்சைக்குரிய சீன உரக் கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்துக்கு மக்கள் வங்கியினால் 69 இலட்சம் அமெரிக்க டொலர்கள் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீக்கப்பட்டதன் காரணமாகவே, இந்த தொகை கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டதாக மக்கள் வங்கி தெரிவித்துள்ளது.

உரக்கப்பல் இலங்கையினால் ஏற்றுக் கொள்ளப்படாதபோதும் தரமான உரத்தை மீள வழங்குவதற்கு இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(அ)

# பஞ்சாப்பில் மோடிக்கு காத்திருந்த அதிர்ச்சி

**பஞ்சாப்பில் புதன்கிழமை நடைபெற்ற போராட்டத்தால் இந்தியப் பிரதமர் மோடியின் வாகனத் தொடரணி மேம்பாலத்தில் நிறுத்தப்பட்டது. பிரதமர் மோடி 15 நிமிடங்களுக்கு மேல் மேம்பாலத்தில் நிற்க வைக்கப்பட்டுள்ளார். அங்கிருந்து மாற்றுவழியில் செல்வதற்கான வாய்ப்புகளும் இருக்கவில்லை. பஞ்சாப் என்பது பாகிஸ்தானின் எல்லையை ஒட்டிய மாநிலம். இது ஒரு கடுமையான பாது காப்பு குறைபாடு.**

பஞ்சாப் மாநிலம் பெரோஸ் மாவட்டத்தில் உள்ள மேம் பாலம் ஒன்றில் 15 நிமிடங் களுக்கு மேலாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பு வாகனத் தொடர ணி நிறுத்த வைக்கப்பட்ட நிலையில், அங்கு பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடு குறித்து விளக்கமளிக்க மாநில அரசுக்கு மத்திய உள் துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

பிரதமரின் பாதுகாப்பானது மத்திய அமைப்புகளும், மாநில காவல் துறையும் இணைந்து திட்டமிடும் பணியாகும். இதற் காகவே, எஸ்.பி.ஜி. தரப்பில் பிரத்தியேகமாக ப்ளூ புக் என்ற நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள் ளன. பிரதமரின் வருகைக்கு மூன்று நாள்களுக்கு முன்னரே, பாதுகாப்பிற்குப் பொறுப்பான சிறப்பு பாதுகாப்புக் குழு, சம்பந்தப்பட்ட மாநிலத்தின் புலனாய்வுப் பணியக அதிகாரி கள், மாநில காவல்துறை உட்பட உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் என அனை வரிடமும் பாதுகாப்பு தொடர் பாக ஆலோசனை நடத்துவார் கள். பிரதமரின் ஒவ்வொரு நிமிடம் குறித்தும் விரிவாக கலந்தாலோசிக்கப்படும். தொடர்ந்து, பிரதமரின் பாது காப்பு ஏற்பாடு நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப் படும்.

**பேசப்பட்டது என்ன?**

பொதுவாக பிரதமரின் பயணத்திட்டத்தில் அவரது கடைசி நிமிட விவரம் வரை குறிப்பிடப்பட்டிருக்கும். பிரத மர் எப்படி வருவார் (விமானம், சாலை அல்லது ரயில் மூலம்) மற்றும் அவர் தரையிறங்கியவு டன், நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு (பொதுவாக ஹெலிகொப்டர் அல்லது சாலை மூலம்) எப்படிச் செல் வார் என்பது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

மேலும், மத்திய அமைப்பு கள் மற்றும் உள்ளூர் உளவுத் துறையின் தகவல்கள் குறித்து கலந்துரையாடப்படும். அரங் கின் நுழைவு மற்றும் வெளி யேறுதல் பகுதிகளின் பாது காப்பு அம்சங்கள், அரங்கிற்கு வருபவர்களை சோதனை செய் தல், மெட்டல் டிடெக்டர் வைப்பது குறித்து பேசப்படும். இதுதவிர, மேடையின் கட்ட மைப்பு மற்றும் நிலைத்தன்மை குறித்தும் விவாதிக்கப்படும்.

பிரதமர் நரேந்திர மோடி யின் பல வருகைகளின் பாது காப்பை நிர்வகித்த மூத்த பொலிஸ் அதிகாரி கூறுகை யில், “குறிப்பிட்ட இடத்தின் தீ பாதுகாப்பும் தணிக்கை செய் யப்படும். முக்கியமாக, அன்றைய தினத்தின் வானிலை அறிக்கை கருத்தில் கொள்ளப் படுகிறது.

ஒருவேளை பிரதமர் படகில் செல்ல வாய்ப்பு இருந்தால், படகின் செயல்பாடு மற்றும் பாதுகாப்பு சான்றிதழ்கள் ஆரா யப்படும். பிரதமர் செல்லக் கூடிய பாதையில் புதர்கள் இருந்தால், அவற்றை வெட் டும்படி எஸ்.பி.ஜி. அறிவுறுத் தலாம். பிரதமர் செல்லும் பாதை வரைபடமாக்கப் பட்டு,அங்கு பாதுகாப்பிற்காக அதிக அதிகாரிகளை நியமிக்க அறிவுறுத்தப்படும்” என்றார்.

மாநில காவல்துறை எஸ். பி.ஜியில் பணியாற்றிய முன் னாள் உபி டி.ஜி.பி. ஓ.பி. சிங் கூறுகையில், “பிரதமருக்கு நெருங்கிய பாதுகாப்பை மட் டுமே எஸ்.பி.ஜி. வழங்குகிறது. பிரதமர் எந்த மாநிலத்திற்கு





செல்கிறாரோ, அங்கு ஒட்டு மொத்த பாதுகாப்பை உறுதி செய்வது மாநில காவல் துறை யின் பொறுப்பாகும். உளவுத் துறை சேகரிப்பு, வழித்தடத்தை கிளியர் செய்தல் மற்றும் கூட் டத்தை நிர்வகித்தல் போன்ற பொறுப்புகள் மாநில காவல் துறைக்கு உள்ளது” என்றார்.

எந்தவோர் அச்சுறுத்தலைப் பற்றியும் தகவல்களை வழங்கு வது மத்திய புலனாய்வு அமைப்புகள் பொறுப்பாகும். எவ்வாறாயினும், பாதுகாப்பு எவ்வாறு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பது குறித்த இறுதி முடிவை எடுப்பது விசேட பாதுகாப்பு குழுதான்.

மாநில காவல்துறை எவ்வித இடையூறு இல்லை என கூறி அனுமதி வழங்கும் வரை பிரத மர் புறப்பட எஸ்.பி.ஜி. அனு மதிக்காது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**சினைப்பர்களை நிறுத்த வேண்டும்**

அதே சமயம், மாநில காவல் துறையும் நாச வேலைகள் நடக் காமல் தடுத்திட சோதனை களை மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பிற்கு சாலையில் பொலிஸாரை நிற்க வைப்பது மட்டுமின்றி, மேல்தளங்களில் சினைப்பர்களையும் வைக்க வேண்டும் என தகவல்கள் கூறுகிறது.

மற்றோர் அதிகாரி கூறுகை யில், “பொதுக் கூட்டங்கள், பேரணிகள் மற்றும் சாலை நிகழ்ச்சிகளின் போது, காவலர் களைத் தவிர, ஒரு எஸ்.பி பாதுகாப்புக்காக சாதாரண உடையில் வலம்வருவார். சில சமங்களில் பொலிஸ் உடை யால் ஏற்படும் தேவையில்லாத குழப்பத்தை தலைவர்கள் விரும்புவது இல்லை. இருப்பி னும், பாதுகாப்பு வழங்குவது காவல் துறை கடமை என்ப தால், பேரணியின் போது, சாதாரண உடையிலும், சில சமயங்களில் கட்சிக்காரர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டும் பணியமர்த்தப்படு கிறார்கள்” என்றார்.

**திடீரென்று திட்டங்கள் மாறினால் என்ன ஆகும்?**

எப்போதும், ஒரு மாற்று ஏற்பாடு திட்டமிடப்படும். குறிப்பாக வானிலையின் திடீர் மாற்றத்தால், குறிப்பிட்ட இடத்திற்கு ஹெலிகொப்டரில் செல்ல முடியாத பட்சத்தில், சாலை மார்க்கமாக அழைத்து செல்லும் வகையில் திட்ட மிடல் இருக்கும். அவ்வழி பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும்.

ஹெலிகொப்டர் விமா னிக்கு 1,000 மீ தொலைவிற்கு தெளிவான பார்வைதிறன் இல்லையென்றால், சாலை வழி பயணம் மேற்கொள்வது வழக்கமான ஒன்றுதான். குளிர்காலங் களில், பனிமூட்டம் காரண மாக பிரதமர் பல நேரங்களில் சாலையில் செல்ல வேண்டியி ருக்கும். பாதைகள் முன்கூட் டியே திட்டமிடப்பட்டு பாது காப்பு அளிக்கப்படும். எதாவது காரணத்தால் பாதை தெளிவாக இல்லாதது கண்டறியப்பட்டா லும், மாநில காவல்துறை அனு மதி வழங்கவில்லை என்றாலும், பிரதமரின் வருகை ரத்து செய் யப்படுகிறது.

**போராட்டம் நடந்தால் என்ன செய்யப்படும்?**

எந்தவொரு வி.ஐ.பி. வரு கைக்கும் எதிராக போராட்டம் நடைபெறுவது முக்கியமான அச்சுறுத்தல் ஆகும். அதனை தடுத்திட, மாநில காவல் துறை யுடன் முன்கூட்டியே விவாதிக் கிறது. பொதுவாக, உள்ளூர் புலனாய்வுப் பிரிவினரால் எந் தக் குழுக்கள் போராட்டத்தைத் திட்டமிடுகிறார்கள் என்ற தகவல் வழங்கப்பட்டு நட வடிக்கை எடுக்கப்படும்.

அதேசமயம், சந்தேகத்திற் கிடமான நபர்கள் அல்லது சாத்தியமான எதிர்ப்பாளர் களின் பட்டியல் உள்ளூர் காவல்துறையிடம் இருக்கும். அதை வைத்து, அவர்களை முன்கூட்டியே கைது செய்ய லாம். திட்டமிட்டு போராட் டம் நடத்தினால், அதை தடுத்து நிறுத்த முடியாது, அந்த வழி தவிர்க்கப்படும்.

**பஞ்சாப்பில் நடந்தது என்ன?**

பஞ்சாப் முதல்வர் சரண்ஜித் சிங் சன்னி, பிரதமர் மோடி தனது திட்டத்தை திடீரென மாற்றியதாகக் கூறியுள்ள நிலையில், பிரதமரின் திட்டம் முன்கூட்டியே தெரிவிக்கப் பட்டதாக உள் துறை அமைச் சகம் கூறியுள்ளது. பஞ்சாப் டி. ஜி.பி., பிரதமர் பயணத்திற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்திய பிறகு, சாலை வழியாக பயணம் மேற்கொள்ளப்பட்டது என அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓ.பி.சிங் கூறுகையில், “பஞ்சாப்பைப் பொறுத்தவரை, மோசமான வானிலை காரண மாக பிரதமர் சாலை வழியாகப் பயணம் செய்யத் தேர்வுசெய்த போது, முழு வழியையும் சரி செய்து, சினைப்பர்களை கூரை களில் நிறுத்துவது உள்ளூர் காவல்துறையின் பொறுப்பா கும். மாநில காவல் துறையிட மிருந்து அனுமதி வரும்வரை, எஸ்.பி.ஜி. பிரதமர் கான்வாய் செல்ல அனுமதி வழங்காது.

இந்த நிகழ்வில், பிரதமர் மோடி 15 நிமிடங்களுக்கு மேல் ஒரு மேம்பாலத்தில் நிற்க வைக் கப்பட்டுள்ளார். அங்கிருந்து மாற்றுவழியில் செல்வதற்கான வாய்ப்புகளும் இல்லை. மேம் பாலத்தின் நுழைவு மற்றும் வெளியேறலைப் பாதுகாக்க உள்ளூர் காவல்துறை தவறிவிட் டது என்பதுதான் உண்மை. பஞ்சாப் என்பது பாகிஸ்தானின் எல்லையை ஒட்டிய மாநிலம் என்பதை நினைவில் கொள் வோம். இது ஒரு கடுமையான பாதுகாப்பு குறைபாடு” என்றார்

- இந்தியன் எக்ஸ்பிரஸ்



# கிழக்கில் ஆக்கிரமிக்கப்படும் தமிழரின் பூர்வீக நிலங்கள்

மட்டுநகரான்

அன்று தந்தை செல்வா கூறியது போன்று இனி தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வாசகத்தினை உண்மையாக்கும் வகையிலான செயற்பாடுகள், இன்று வட,கிழக்கில் தமிழ் மக்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில், தினமும் தமிழ் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையினை எதிர்கொள்கின்றனர். சிறுபான்மையினத்தவர்கள் கேட்க நாதியற்றவர்கள் என்ற வகையிலான செயல்பாடுகளை பெரும்பான்மையினத்தவர்கள் முன்னெடுக்கும் நிலையினையே காணமுடிகின்றது.

தமிழர்களின் பூர்வீக நிலங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கான செயல்பாடுகள் மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் வாழும் எல்லைப் பகுதிகளிலிருந்து தமிழ் மக்களை விரட்டுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகள் தொடர்ச்சியாகப் பெரும்பான்மை சமூகத்தின் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி வருகின்றமையை அண்மைக் காலமாக நடைபெற்று வரும் தொடர்ச்சியான பல சம்பவங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன.

தமிழரின் பூர்வீக நிலங்கள்அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வடமுனை, ஊத்துச்சேனை கிராம மக்கள் கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் மூலம் குறித்த பகுதியில் பெரும்பான்மையினத்தவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் பல வெளிச்சத்துக்கு வந்தாலும், வடமுனை ஊத்துச்சேனை பிரதேசமானது தொடர்ச்சியாக சிங்கள பெரும்பான்மையினத்தவர்களினால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியே வருகின்றது.

வடமுனை, ஊத்துச்சேனை பிரதேசம் என்பது தமிழர்கள் ஆதிகாலம் தொட்டு வாழும் பகுதியாகும். காடு சார்ந்த பகுதியில் வாழ்ந்த மக்கள், தமது அன்றாட தேவையினைத் தாங்களே பூர்த்தி செய்யும் நிலையிலிருந்தாலும், கடந்த காலப் போராட்டம் காரணமாக அவர்களின் நிலைமையென்பது சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையாக மாறியுள்ளது.

வடமுனை, ஊத்துச்சேனைப் பிரதேசமானது மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் வெலிக்கந்தை சந்தியிலிருந்து 18கிலோ மீற்றர் தூரத்தில் காட்டுப் பகுதியையும் இயற்கை வளங்களையும் ஊடறுத்துச் செல்லும் பகுதியாகும். அங்குள்ள இயற்கையினைக் கொண்டே அதிகளவில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வயல் செய்கை, காடுகளில் தேன் மற்றும் வேட்டையாடுதல், மீன்பிடி போன்ற தொழில்களில் இப்பகுதி மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதியில் சுமார் 600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. வடமுனை, ஊத்துச்சேனைக்கு அருகில் வேறு கிராமங்கள் கிடையாது. காடுகளுக்கு மத்தியிலேயே அந்த கிராமங்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாக இக்கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த கிராமங்களைப் பொறுத்தவரையில், யுத்த காலத்தில் தமிழர்களின் வீரத்தினை உலகமெங்கும் வெளிப்படுத்துவதற்கு இங்கும் பலர் மாவீரர்களானதுடன், இப்பிரதேசம் யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய கேந்திர நிலையமாகவும் காணப்பட்டது.

கிழக்கின் படுவான்கரையிலிருந்த விடுதலைப்புலிகளின் வடக்கு நோக்கிய நகர்வுக்குப் பிரதான இடமாக இந்த வடமுனை பகுதியிருந்தது. வடமுனைப் பகுதியானது, தனியான கேந்திர நிலையமாக விடுதலைப் புலிகளினால் பிரகடனப் படுத்தப்பட்டதால் சிங்கள பெரும்பான்மை இனத்தவர்களின் கண்களிலும் ஒருபார்வையிருந்தே வந்தது.

கிழக்கில் உள்ள போராளிகள் வடக்கு நோக்கி நகர்வதற்கு வாகரையூடாகச் சென்று அங்கிருந்து படகு மூலம் வடக்குக்குச் செல்வதற்கு இந்த பாதையூடாக வந்து வடமுனை ஊத்துச்சேனை ஆகிய பகுதிகளில் பதுங்கியிருந்து இராணுவத்தின் பிரசன்னம் குறைவாகியிருக்கும் நேரத்தில் கொழும்பு - மட்டக்களப்பு வீதியை குறுக்கறுத்து வாகரைக்கு சென்று, அங்கிருந்து வடக்கு நோக்கி செல்லும் நிலையிருந்தது. இதன் காரணமாக இப்பகுதி விடுதலைப்புலிகளின் காலத்தில் அனைவராலும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக கருதப்பட்ட போதிலும், இன்று இப்பகுதி எவராலும் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுவதே கவலைக் குரியதாகும்.

யுத்த காலத்திற்கு முன்பிருந்த காலம் தொடக்கமே இப்பகுதியில் அத்துமீறிய குடியேற்றங்கள் மேற்கொள்வதற்கான பல முயற்சிகளும் பல்வேறு காலப் பகுதிகளிலும் முன்னெடுத்துவந்த போதிலும் அவை தடுக்கப்பட்டே வந்துள்ளன.

மட்டக்களப்பின் முன்னாள் அமைச்சர் தேவநாயகம் காலப்பகுதியில் இப்பகுதியில் சிங்களவர்கள் குடியேற முற்பட்டபோது அமைச்சர் அங்கு சென்று அவர்களை அடித்து துரத்தியதாகவும் தகவல்கள் இருக்கின்றன. இவ்வாறான முக்கியத்துவம்வாய்ந்த, தமிழர்களின் இருப்பாக கருதப்படும் இப்பகுதியைப் பாதுகாப்பதற்குத் தமிழர்கள் தவறிவருவது கவலைக்குரிய விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக இப்பகுதியைப் பொறுத்தவரையில், தமிழ் தேசியத்தினை நேசிக்கும் மக்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். அதன் காரணமாக கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்களுக்கு இப்பகுதியில் உள்ள தமிழ் மக்கள் ஆதரவளிப்பது என்பது மிகவும் குறைவான காரணத்தினால், ஆட்சியிலிருக்கும்போது இவர்கள் இப்பகுதி தொடர்பில் கவனம் செலுத்துவது மிகவும் குறைவானதாகவே யிருந்துவருகின்றது.

தமிழ்தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளுக்கு இந்த மக்கள் ஆதரவளிக்கின்ற போதிலும், தமிழ் தேசிய அரசியல் கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்னர் இப்பகுதிக்குச் செல்லாத நிலையே காணப்படுகின்றது. இப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னையைத் தீர்ப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்காத நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில்தான் இன்று வடமுனை, ஊத்துச்சேனையினைச் சூழ சிங்களப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களினால் காடுகள் அழிக்கப்பட்டு, மணல் கொள்ளைகள் பாரியளவில் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த மண் அகழ்வுகள் காரணமாக குறித்த பகுதியின் இயற்கை அழிக்கப்படுவதுடன், வீதிகள் மிக மோசமான முறையில் பாதிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் மழை வெள்ளம் ஏற்பட்டால் பாரிய அழிவுகள் ஏற்படும் என்பதை இப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஊடாக முன்வைத்தனர்.




தமிழரின் பூர்வீக நிலங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் எந்தவித அனுமதியுமின்றி பொலநறுவை மாவட்டத்தில் உள்ளவர்களினால் பெருமளவான லொறிகள், ட்ரக்டர்கள் பயன்படுத்தப்பட்டு இந்த கொள்ளைகள் முன்னெடுக்கப்படுவதானது வெறுமனே மண் கொள்ளை என்பதால் மட்டும் வரையறுக்க முடியாது. இதுவொரு திட்டமிட்ட குடியேற்றத்திற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது.

2012ஆம் ஆண்டு இப்பகுதியில் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு மகாவலி அபிவிருத்தி திட்டம் மூலம் காணிகள் வழங்கப்பட்டு சேனைபயிர்ச்செய்கை என்ற கருத்திட்டத்தினைக் கொண்டு முன்னெடுக்கப்படவிருந்த பாரியளவிலான குடியேற்ற நடவடிக்கைகள் அன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட அழுத்தங்கள் காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் 2014ஆம் ஆண்டு இப்பகுதியில் 400குடும்பங்களுக்கு காணிகள் உள்ளதாகவும் யுத்த காலத்தில் அவர்கள் இடம்பெயர்ந்ததாகவும் கூறி குடியேற்ற நடவடிக்கைகளுக்கு அடித்தளம் இடப்பட்ட போதும், அவையும் தடுத்து நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக இப்பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்களை அங்கிருந்து வெளியேற்றும் வகையான செயல்பாடுகளே தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படுகின்றன.

வடமுனை,ஊத்துச்சேனை மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக பாடசாலை கல்வி நடவடிக்கைகள் 09ஆம் தரம் மட்டுமே உள்ளது. அதற்கு பின்னர் கல்வி கற்பதற்கு வாழைச்சேனைக்கு சுமார் 40கிலோமீற்றர் தூரத்திற்கு வரவேண்டும் என்பதனால் பாடசாலை கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை, சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு 18 கிலோமீற்றர் தூரம் உள்ள வெலிக்கந்தைக்கே வரவேண்டும். இரவில் நோயினால் பாதிக்கப்படும் ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் உயிரிழக்கும் நிலையே காணப்படுகின்றது. வீதிகள் இதுவரையில் அமைக்கப்படாத காரணத்தினால் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலேயே பயணம் செய்யும் நிலை காணப்படுகின்றது.

இப்பகுதியானது சுற்றுலாத்துறை மற்றும் இயற்கை வளங்களைக் கொண்ட அழகிய பகுதியாக காணப்படுவதன் காரணமாக இப்பகுதியில் மக்களை வளப்படுத்து வதற்கான அனைத்து வசதிகளும் உள்ளபோதிலும், தமிழர்கள் என்ற காரணத்தினால் இப்பகுதி வளப்படுத்தால் வளங்கள் சூறையாடப்படுகின்றன.


இக்கிராமங்களை ஊடறுத்து பெரும்பான்மையினம் ஆக்கிரமிப்புகளை செய்யுமானால் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பு என்பது கேள்விக்குறியாக மாறும் நிலையுருவாகியுள்ளது. இங்குள்ள தமிழ் மக்கள் இந்த நிலைமையினை உணர்ந்தமையினை அண்மையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மூலம் உணரமுடிகின்றது.


நடைமுறையில் நாங்கள் சிங்கள பெரும்பான்மையினத்தின் ஆக்கிரமிப்புகள் குறித்து சர்வதேசம் வரையில் வாய்கிழிய கத்தினாலும் அது கத்தலுடன் மட்டுமே முடிந்துவிடுகின்றது. ஆனால் ஆக்கிரமிப்புகள் நடைபெறுவதற்கான சமிக்ஞைகள் வெளியிடப்பட்டும் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் அதன் பாதிப்பு தமிழ் மக்களையே சாரும் என்பதை தமிழ் தேசிய கட்சிகள் உணர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.


**தமிழர்களின் பூர்வீக நிலங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கான செயல்பாடுகள் மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் வாழும் எல்லைப் பகுதிகளிலிருந்து தமிழ் மக்களை விரட்டுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகள் தொடர்ச்சியாகப் பெரும்பான்மை சமூகத்தின் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி வருகின்றமையை அண்மைக் காலமாக நடைபெற்று வரும் தொடர்ச்சியான பல சம்பவங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன.**

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

5.


6. ஒரே கூட்டத்தைச் சேர்ந்த பொருள்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.


7. கூட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


- பின்வரும் கவிதையை வாசித்து 8, 9 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சின்னஞ் சிறிய பிள்ளைகளே
சிறப்பாய் உடலில் நலம் பெறவே
எண்ணம் போல விளையாடி
உழைக்க வேண்டும் சுறுசுறுப்பாய்

8. இப்பாடல் யாரை விளித்துப் பாடப்படுகிறது?
(1) சுறுசுறுப்பாய் உழைப்பவர்களை விளித்து
(2) விருப்பம் போல விளையாடுபவர்களை விளித்து
(3) சின்னஞ் சிறிய பிள்ளைகளை விளித்து

9. சுறுசுறுப்பாய் உழைப்பதனால்,
(1) தேக சுகம் பெறலாம்.
(2) விருப்பம் போல விளையாடலாம்.
(3) 'சிறந்த சிறுவர்கள்' என்று பெயர் பெறலாம்.

10. ○□□△ = ⊙○△ எனின், கீழுள்ள தொடர்புகளில் சரியானது எது?
(1) ⊙ □ = ○
(2) ○ △ = ⊙
(3) □ □ = ⊙

- 11, 12 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உவமானத்துக்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

11. செவிடன் காதில் ஊதிய சங்குபோல,
(1) பயனற்ற செயலைச் செய்தல்.
(2) தெளிவாக விளங்கும்படி கூறுதல்.
(3) ஒன்றைச் சரியாகச் செய்ய முயற்சித்தல்.

12. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல,
(1) துன்பத்திலிருந்து மீள முயற்சித்தல்.
(2) துன்பம் ஏற்பட்டதை எண்ணி மனங்கலங்குதல்.
(3) துன்பத்திற்கு மேல் துன்பம் ஏற்படல்.

13. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவுசெய்க.
8 □ 4 □ 2 = 30
(1) +, × (2) ÷, × (3) ×, −

## விடைகள்

1. (2) 2. (1) 3. (2) 4. (3) 5. (2) 6. (3) 7. (3)
8. (3) 9. (1) 10. (3) 11. (1) 12. (3) 13. (3)

## கல்வி tv CHANNEL-1

**08.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**08.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# “மக்கள் பிரச்சனையை பேசுவதற்கு அரசுக்குள் சுதந்திரம் இல்லை!“

கொழும்பு, ஜன. 08

“மக்களின் பிரச்சினைகளை வெளிப்படையாக பேசுவதனால் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படும் என நினைத்தால் அது ஆட்சியாளர்களின் முட்டாள் தனமாகும். நாட்டு மக்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்னைகளை பேசக்கூட எமக்கு இடமில்லை என்றால் அரசாங்கத்திற்குள் கருத்து சுதந்திரம் இல்லை என்பதே அதன் வெளிப்பாடு”, என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கல்வி இராஜாங்க அமைச்சராக இருந்த சுசில் பிரேமஜயந்த அரசாங்கத்தை விமர்சித்தமையால் அண்மையில் பதவி நீக்கப்பட்டார்.

எனது பதவி நீக்கம் குறித்து பலர் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். எதிர்க்கட்சியினர் பலர் என்னுடன் உரையாடினர். ஆளும் கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் என்னுடன் உரையாடினர். எவ்வாறு இருந்தாலும் எனது நிலைப்பாடு சரியானது என்பதே பொதுவான கருத்தாக வெளிப்பட்டது.

மக்களின் பிரச்னைகளை பேசுவதற்கும், மக்களுக்கு உண்மைகளை கூறுவதற்கும் நாம் எதிர்கட்சியாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அரசாங்கத்தில் இருந்தாலும் அரசாங்கம் விடும் தவறுகளை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். மக்களின் ஆணையில் ஆட்சிக்கு வந்துள்ள நாம் மக்களுக்காக ஆட்சி செய்ய வேண்டும். ஆகவே, மக்களின் பிரச்னைகளை நான் வெளிப்படையாக பேசுகின்றேன் என்பதற்காக, அரசாங்கம் விடும் தவறுகளை சுட்டிக்காட்டுகின்றேன் என்பதற்காக எனது பதவி பறிக்கப்படுகின்றது என்றால் அரசாங்கத்திற்குள் கருத்து சுதந்திரம் இல்லை என்பதே அதன் வெளிப்பாடாகும் - என்றார். (ஐ)

# புதிய அரசமைப்பின் வரைவை சுதந்திரநாளில் வெளிப்படுத்துக!

## கரு ஜயசூரிய வேண்டுகோள்



கொழும்பு, ஜன. 08

“புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற ஜனாதிபதியின் வாக்குறுதிக்கு அமைய அரசாங்கம் அரசமைப்பு தொடர்பான வரைவை எதிர்வரும் சுதந்திர தினத்தில் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்” என முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவருமான கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய அமைப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கத்தை அமைத்து ஒரு வருடத்துக்குள் ஜனநாயக ரீதியிலான புதிய அரசமைப்பை உருவாக்குவதாக ஜனாதிபதி நாட்டுக்கு மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், அதுதொடர்பான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் மேலும் காலம் தாமதிக்காமல் விரைவாக முன்னெடுக்க வேண்டும்.

இதற்காக எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்தில் புதிய அரசமைப்பின் வரைவின் பகுதியையாவது நாட்டு மக்களுக்கு அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். அத்துடன், அரசமைப்பு மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் பாராளுமன்றம் மற்றும் மக்களின் ஆதரவு இல்லாமல் மேற்கொள்ளப்படும். அரசமைப்பை மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

20ஆவது திருத்தம் மற்றும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தால் நாட்டுக்கு ஏதாவது நன்மை கிடைத்ததா என கேட்கின்றேன். மாறாக 20ஆவது திருத்தம் நகைச்சுவையாகவே அமைந்திருக்கின்றது. அத்துடன், முன்னாள் ஜனாதிபதி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன 20ஆவது திருத்தத்தின் விளைவுகளை சுட்டிக்காட்டி இருந்தார் - என்றார். (ஐ)

## திருகோணமலை எண்ணெய்க் குதங்கள்

# அமைச்சரவைத் தீர்மானத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல்

கொழும்பு, ஜன. 08

திருகோணமலை எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய நிறுவனத்துக்கு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கை தொடர்பான, அமைச்சரவை தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்யப் பட்டது.

தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளரே, இந்த அடிப்படை உரிமை மனுவை சட்டத்தரணி சுனில் வட்டகல ஊடாக தாக்கல் செய்துள்ளார்.

நிதி அமைச்சர், வலுசக்தி அமைச்சர், சட்டமா அதிபர், ஜனாதிபதி செயலாளர் உட்பட 47 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். இது தொடர்பான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் இரவு கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு-கிழக்கு தமிழ் கட்சிகளின் பயணத்துக்கு நாம் தடையில்லை!

## மனோ, திகா, ராதா நேற்று கூட்டாக அறிவிப்பு

**கொழும்பு, ஜன. 08 வடக்கு, கிழக்கு கட்சிகளின் பயணத்துக்கு தடையாக இருக்க போவதில்லை. நமது பயணத்தையும் கைவிடப் போவதில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது.**



தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியன அங்கம் வகிக்கின்றன.

இந்நிலையில் மேற்படி மூன்று கட்சிகளின் தலைவர்களான மனோ கணேசன், இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம் இணைந்து நேற்று கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

“இந்திய பிரதமருக்கு, இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளின் விண்ணப்ப கடிதம்” என்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டு செயல்பாட்டில், அண்மைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாசைகளையும் உள்ளடக்குவதில் சிக்கலை எதிர்கொண்டதாலும், எமது பங்களிப்பு வடக்கு-கிழக்கு தமிழ் கட்சிகளின் சுதந்திர செயற்பாட்டுக்கு பாதகமாக இருப்பதை உணர்ந்ததாலும், இந்த செயல்பாட்டுக்கு வெளியில் நின்று அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் என்ற பொதுநோக்கில், இந்த செயல்பாட்டை ஆரம்பித்த ஏற்பாட்டாளர்கள் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி, இணைப்பாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருக்கு எமது வாழ்த்துகளை தெரிவிக்கிறோம்.

அதேவேளை, பொது இணக்கப்பாட்டின் மூலம் பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில் கொண்டு மலையக தமிழரின் அபிலாசைகளை முன்னிறுத்தி பாரத பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தனித்தனியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் ஆவணக் கடிதம் எழுதப்படும்.

முதல் கலந்துரையாடல் “இலங்கை அரசியலமைப்பில் ஏற்கனவே உள்ள 13ஆவது (13A) திருத்த சட்டத்தை முற்று முழுதாக நடைமுறைப் படுத்தி, அர்த்தமுள்ள அதிகார பகிர்வை உறுதி செய்து, மாகா ணசபை தேர்தலையும் விரைந்து நடத்த இலங்கை அரசை வலியுறுத்த, இந்தியாவை ஒருமித்து தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் கோருதல்” என்ற அடிப்படையிலான அழைப்பின் பேரிலேயே ஏற்பாட்டாளர்களால் இந்த கூட்டு செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கட்சி ஆகிய வடக்கு-கிழக்கு தமிழ் கட்சிகளுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளும் நவம்பர் இரண்டாம் திகதி நடைபெற்ற முதல் கலந்துரையாடலில் கலந்துகொண்டன.

இலங்கை அரசமைப்பில் இடம் பெற்றுள்ள ஒரே அதிகார பரவலாக்கல் சட்டமான 13ஆம் திருத்தம் என்பதை இறுதி தீர்வாக கருதி இந்த பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் இலங்கை அரசாங்கம், இந்த குறைந்த பட்ச சட்டத்தைக்கூட முழுமையாக அமுல் செய்யாமல் இழுத்தடிப்பதுடன், இச்சட்டமூலம் மாகாணசபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களையும்கூட வாபஸ் பெறுகிறது என்ற உண்மை உலகுக்கு அதிகாரபூர்வமாக ஒட்டு மொத்த தமிழ் பேசும் கட்சிகளால் அறிவிக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக் கமே எமது பொது நோக்காக இருந்தது.

இந்த செயல்பாட்டில், இலங்கை தமிழரசு கட்சியும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை ஆரம்பம் முதல் வலியுறுத்தி கூட்டமைப்பின் தலை வரை நேரடியாக, தமிழ் முற் போக்கு கூட்டணியின் மனோ கணேசனும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமும் சந்தித்து அழைப்பு விடுத்ததையும், தமிழரசு கட்சியை தவிர்த்து விட்டு விண்ணப்ப கடிதத்தில் கையெழுத்திடும் யோசனையை, தமிழ் முற் போக்கு கூட்டணியாகிய நாம் நிராகரித்தோம் என்பதையும் ஏற்பாட்டாளர்கள் நன்கறி வார்கள்.

ஆரம்பத்தில், பாரத பிரதமருக்கான கடித வரைவு, அனைத்து கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும், பொது குறைந்த பட்ச நிலைப்பாடுகளை கொண்ட விண்ணப்பக் கடிதமாக சுமார் ஒன்றரை பக்கத்தில் வடிவமைக்கப்பட்டது.

எனினும் தொடர்சியாக நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது, தமிழ் தேசிய அரசியலின் சமகால வரலாறு முழுமையாக அதில் எழுதப்பட்டு, எட்டு பக்கங்களை கொண்ட நீண்ட ஆவணக்கடித வரைவாக மாற்றப்பட்டது. இதன் பின்னுள்ள நியாயப்பாட்டை எம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது. ஆனால், ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்கள் சார்பான கடிதம் என்பதால், இதே நியாயப்பாட்டின் அடிப்படையில், இக்கடிதத்தில் மலையக தமிழ் மக்களின் அபிலாஷைகளும் உள்ளடக்கப்பட வேண்டிய இயல்பான தேவைப்பாடு எழுந்தது. மேலதிகமாக இந்த ஆவணக்கடித வரைவு, இறுதி வடிவம் பெறமுன்னரே ஊடகங்களின் வெளிப்படுத்தப்பட்டு வாதப்பிரதிவாதங்களை தமிழ் பேசும் அரசியல் சமூக பரப்புகளில் ஏற்படுத்தியது.

இந்நிலையிலேயே, கடந்த வருடத்தின் இறுதி நாளான்று, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில், மனோ கணேசன் உட்பட கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மறுநாள் இவ்வருடத்தின் முதல் நாள், கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில் கூடி புதிய கடித வரைவு தயாரிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆவணக்கடித வரைவு, உடனடியாகவே இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டதை நாம் அறிந்தோம்.

ஆகவே, பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில் கொண்டு சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாசைகளை முன்னிறுத்தி பாரத பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் ஆவணக்கடிதம் எழுத தமிழ் முற்போக்கு கூட்டணி முடிவு செய்துள்ளது. இப்பின்னணிகளிலேயே, தேவையற்ற முரண்பாடுகளை தவிர்க்கும் நோக்கில், “வடக்கு-கிழக்கு தமிழ் கட்சிகளின் இந்த செயல் பாட்டுக்கு வெளியில் நின்று ஒத்துழைப்புகளை வழங்குவோம்” என்ற முடிவை நாம் எடுத்துள்ளோம். வடகிழக்கு உடன்பிறப்புகளுக்கு, வரலாறு முழுக்கவும் இதை நாம் செய்துள்ளோம். இனியும் செய்வோம். “உரிமைக்கு குரல் கொடுப்போம் உறவுக்கு கை கொடுப்போம்” என்ற எமது கொள்கை தொடரும்-என்றுள்ளது. (அ)

ஈழநாடு



# 50 ஆயிரம் பள்ளி மாணவர்களுடன் 5 ஆயிரம் ஆசிரியருக்கும் தொற்று!

## திக்குமுக்காடுகிறது பிரான்ஸ்

## பாரிஸ் சிறைச்சாலையில் கைதிகள் 200 பேருக்கு கொத்தாக ஒமைக்ரோன்

பரிஸ், ஜன. 08

மிக வேகமாகப் பரவிவருகின்ற ஒமைக்ரோன் வைரஸ் ஜனவரி இரண்டாவது வாரத்தில் அதாவது அடுத்த வாரமளவில் உச்சக் கட்டத் தொற்றை எட்டும் என்று நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் 2லட்சத்து 61ஆயிரத்து 481 புதிய தொற்றுக்கள் பதிவாகியிருக்கின்றன. இருநூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.



ஒமைக்ரோன் வைரஸ் தொற்று பாடசாலைகளை இயக்க முடியாத நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறது. ஆசிரியர்கள் இடையே இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுக்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 631 என்றும், திங்களன்று பாடசாலைகள் ஆரம்பித்த பிறகு கடந்த நான்கு நாட்களில் மட்டும் தொற்றுக் கண்டறியப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 47 ஆயிரத்து 453 என்றும் அறிக்கைகள் வெளியாகியுள்ளன. தொற்றுக்குள்ளான ஒன்பது ஆயிரம் வகுப்பறைகள் மூடப்பட்டிருக்கின்றன.

தொற்று உறுதியான மாணவர்களும் தொடர்புடையோருமாக வகுப்புகளுக்கு வராதவர்களது எண்ணிக்கை நாளாந்தம் பல ஆயிரக்கணக்கில் அதிகரித்து வருகிறது. தொற்று மற்றும் தொற்றுடன் தொடர்புபட்ட தமது பிள்ளைகளைப் பாடசாலைகளில் இருந்து இடையில் வீட்டுக்கு அழைத்து அவர்களை வைரஸ் பரிசோதனைகளுக்கு உட்படுத்திப் பராமரிப்பதில் பெற்றோரும் பாதுகாவலர்களும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதேவேளை, பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் மருத்துவர்கள் அணிகின்ற மிகு திறன் கொண்ட மாஸ்க்குகளை இம்மாத இறுதிக்குள் விநியோகிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாக பிரதமர் ஜீன் காஸ்ரோ தெரிவித்திருக்கிறார். எவ்.எவ்.பி.2 எனப்படுகின்ற அந்த வகை மாஸ்க்குகள் சாதாரணமானவற்றை விட அதிக பாதுகாப்பு அளிக்கக் கூடியவை என்று கருதப்படுகிறது. ஒமைக்ரோன் தொற்றைத் தவிர்ப்பதற்கு எவ்.எவ்.பி.2 மாஸ்க் சிறந்ததா என்பதை அறிவதற்காக அரசு நாட்டின் பொதுச் சுகாதார அதிகார சபையின் முடிவுக்காகக் காத்திருக்கிறது என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

**வில்ப்பன் சிறையில் பெரும் தொற்று**

பரிஸ் பிராந்தியத்தின் வில்ப்பனில் அமைந்துள்ள சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 800 கைதிகளில் 200 பேரை ஒமைக்ரோன் வைரஸ் பெரும் கொத்தாகப் பீடித்திருக்கிறது. 179 கைதிகளில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களும் அவர்களோடு தொடர்புடைய கைதிகளும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கைதிகளைப் பார்வையிடுவதற்காக வெளி ஆட்கள் செல்வதை சிறை நிர்வாகம் தடைசெய்துள்ளது.

பிரான்ஸின் சிறைகளில் இதுவரை கைதிகள் மற்றும் பணியாளர்கள் அடங்கலாக மொத்தம் 27 ஆயிரத்து 370 பேர் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றனர். (அ)




### இத்தாலியிலிருந்து இந்தியாவுக்கு

# ஒரே விமானத்தில் பயணித்த 125 பயணிகளுக்கு கோவிட்!

புதுடில்லி, ஜன. 08

இத்தாலியிலிருந்து அமிர்சரஸ் நகரத்துக்கு நேற்று முன்தினம் பிற்பகல் வருகை தந்த விமானத்தில் பயணித்த 125 பயணிகளுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மொத்தம் 19 குழந்தைகள் உள்ளிட்ட 179 பயணிகள் இருந்த இந்த விமானம், இத்தாலியின் மிலன் நகரிலிருந்து புறப்பட்டு, அமிர்சரஸ் நகருக்கு பிற்பகல் 1.30 மணிக்கு தரையிறங்கியது.

இத்தாலியில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால், அங்கிருந்து வரும் பயணிகளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 179 பயணிகளில் 125 பேருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)



# 20,000 ஆப்கானியர்களை பிரிட்டனில் மீள்குடியமர்த்தும் திட்டம் அறிமுகம்!

லண்டன், ஜன. 08

20,000 ஆப்கானியர்களை பிரித்தானியாவில் மீள் குடியேற்ற உதவும் வகையில், புதிய திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் வெளியேறிய 5,000க்கும் மேற்பட்டோர் முதல் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று நீதி அமைச்சர் விக்டோரியா அட்கின்ஸ் கூறினார்.

இருப்பினும், மக்களை அழைத்துச் செல்வதற்கான பிரித்தானியாவின் திறன் வரம்பற்றது என்றும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிப்பது மிகவும் கடினமானது என்றும் அவர் எச்சரித்தார்.

திட்டத்தைத் தொடங்குவதில் ஏற்பட்ட தாமதம் உயிர்களை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்று தொழிலாளர் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை, ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டை தலிபான்கள் மீண்டும் கைப்பற்றினர்.

அந்த காலகட்டத்தில் மேற்கத்திய அரசாங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரிந்த ஆப்கானிய குடிமக்களின் பாதுகாப்பு குறித்து பெரும் கவலைகள் எழுந்தன. இதனைத்தொடர்ந்து அமெரிக்கா மற்றும் பிரித்தானியா அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. (அ)

# றோயல் கடற்படை கப்பலை மோதியது ரஷ்ய நீர்மூழ்கி!

லண்டன், ஜன. 08

வடக்கு அட்லாண்டிக் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த றோயல் கடற்படை போர்க்கப்பலுடன், ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் மோதியதாக பாதுகாப்பு அமைச்சகம் உறுதி செய்துள்ளது.


எச்.எம்.எஸ். நோர்தம்பர்லாண்ட் நீர்மூழ்கிக் கப்பலைக் கண்காணித்துக்கொண்டிருந்தபோது அது கப்பலின் சோனாரைத் தாக்கியது.

இந்த சம்பவம், 2020ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஓர் ஆவணப்படத்தை படமாக்கும் ஒரு தொலைக் காட்சி குழுவினரால் படமாக்கப்பட்டது.

வேண்டுமென்றே மோதல் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று பிரித்தானிய பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

ரஷ்யக் கப்பலுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டதா என தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் சேதமடைந்த உபகரணங்களை மாற்றுவதற்காக போர்க்கப்பல் ஸ்கொட்லாந்தில் உள்ள துறைமுகத்துக்குத் திரும்ப வேண்டியிருந்தது.

சமீபத்திய ஆண்டுகளில் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் செயற்பாடு அதிகரித்து வருகிறது. மேலும் ரோயல் கடற்படை போர்க் கப்பல்கள் வடக்கு அத்லாந்திக்கில் தொடர்ந்து ரோந்து செல்கின்றன. (அ)





# மெக்சிக்கோவில் காருக்குள் பத்து மனித உடல்கள் மீட்பு!

மொக்சிக்கோ சிற்றி, ஜன. 08

மத்திய மெக்சிக்கோ மாநிலமான ஸகாடெகாஸில், காருக்குள் 10 உடல்கள் கண்டெடுக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் ஒரு பகுதியாக, சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மஸ்டா எஸ்யூவி ரக வாகனம், உள்ளூர் மாநில ஆளுநர் அலுவலகத்துக்கு வெளியே ஒரு பொது சதுக்கத்தின் நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த வாகனத்தின் மீது அதிகாரிகள் சந்தேகம் அடைந்து, சோதனை செய்தபோது குறித்த பத்து பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மத்திய மாநில ஆளுநர் டேவிட் மான்ரியல், இரண்டு சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை சமூக ஊடகங்களில் உறுதிப்படுத்தினார்.

குறித்த இருவரும் அலுவலகத்துக்கு முன்னால் வாகனத்தை விட்டுச் செல்ல வந்தவர்கள் என அவர் குற்றம் சாட்டினார். (அ)

## பந்துவீச்சு தாமதத்தை தடுக்க புதிய விதிமுறை அறிமுகம்!

டுபாய், ஜன. 08

ஓவர்களை குறிப்பிட்ட நேரத்தில் வீச அணிகள் அதிக நேரம் எடுத்துக்கொள்வதைத் தடுக்கும் பொருட்டு புதிய விதிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) இருபது -20 கிரிக்கெட்டில் ஒரு இனிங்ஸை நிறைவு செய்ய 90 நிமிடங்கள் வழங்கப்படுகின்றன.

அதாவது 90 நிமிடங்கள் நிறைவடையும்போது 20ஆவது ஓவரைத் தொடங்கியிருக்க வேண்டும். இந்த விதியைப் பின்பற்றாத அணிகளுக்கு அபராதம் விதிக்கப் படுகிறது. எனினும், அணிகள் சிலசமயம் 20 ஓவர்களை முடிக்கக் கூடுதல் நேரத்தை எடுத்துக்கொள்கின்றன. இதைத் தடுக்கும் பொருட்டு புதிய விதிமுறையை ஐ. சி. சி. அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன்படி, 90 நிமிடங்களுக்குள் 20 ஓவர்களை முடிக்க முடியாவிட்டால், மீதமுள்ள ஓவர்களின்போது 30 கெஜம் வட்டத்துக்கு வெளியே நிற்கும் வீரர்களில் ஒருவரை அணிகள் குறைத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக 18ஆவது ஓவர் தொடங்கும்போதே பந்துவீசும் அணி 90 நிமிடங்களைக் கடந்துவிட்டால் மீதமுள்ள இரு ஓவர்களிலும் 30 கெஜம் வட்டத்துக்கு வெளியே ஒரு களத்தடுப்பு வீரர் குறைவாக களத்தடுப்பு செய்யவேண்டும். இதன் காரணமாகப் பந்துவீசும் அணிக்குப் பாதிப்பு ஏற்படும். கடைசி ஓவர்களில் எதிரணி அதிக ஓட்டங்களை எடுக்கும். அதனால் 20 ஓவர்களைக் குறித்த நேரத்துக்குள் முடிக்க அணிகள் முற்படும். இக்காரணங்களால் இந்தப் புதிய விதிமுறையை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்ற 100 பந்து போட்டியில் இந்த விதிமுறை வெற்றிகரமாக நடைமுறையானதால், ஆடவர் மற்றும் மகளிர் சர்வதேச இருபது - 20 ஆட்டத்திலும் அறிமுகமாகிறது.

சபைனா பார்க்கில் ஜனவரி 16 அன்று நடைபெறும் மேற்கிந்தியத் தீவுகள் - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இருபது - 20 ஆட்டத்தில் இந்தப் புதிய விதிமுறை முதன்முதலாக நடைமுறையாகிறது. (ஐ)

## ஜொனி பெயர்ஸ்ரோ சதம் இங்கிலாந்து போராட்டம்!



சிட்னி, ஜன. 08

ஜொனி பெயர்ஸ்ரோவின் சதத்தின் உதவியால் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இங்கிலாந்து அணி போராடி வருகின்றது.

அவுஸ்திரேலியாவில் நடக்கும் 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரில், மூன்று போட்டிகளில் வெற்றி பெற்று அவுஸ்திரேலிய அணி முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில், நான்காவது போட்டியில் இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் தற்போது மோதி வருகின்றன.

முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்களை இழந்து 416 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இரண்டாம் நாளின் இறுதியில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி அன்றைய நாள் ஆட்டம் முடிவடைந்தபோது 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடக்க வீரர்களான ஹமீட் 2, கிராவ்லி 2 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து அவர்கள் துடுப்பெடுத்தாடினர். ஹமீத் 6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஸ்ரார்க்கின் பந்தில், விழ அதன் பின் கிராவ்லி 18, ரூட் 0, மலன் 3, என வேகமாக விக்கெட்கள் வீழ்த்தப்பட்டன.

ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த பென் ஸ்ரோக்ஸ், ஜொனி பெயர்ஸ்ரோ விக்கெட் வீழ்ச்சியைத் தடுக்க நிதானமாக துடுப்பெடுத்தாடியது. இருவரும் அற்புதமான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். இதனால், இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை மெல்ல மெல்ல உயர ஆரம்பித்தது.

இருவரும் அரைச்சதம் கடந்த நிலையில், பென்ஸ்ரோக்ஸ் 66 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நதன் லியோனின் பந்தில் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். இந்த இணை ஐந்தாவது விக்கெட்டுக்காக 128 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து வந்த பட்லர் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழக்க, மார்க் வூட் பெயர்ஸ்ரோவுடன் சேர்ந்து நிலைத்து ஆடினார். எனினும், இந்த இணையும் அதிக நேரம் நீடிக்கவில்லை. 39 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழக்கவே, களம் புகுந்தார் ஜாக் லீச்.

இதனிடையே, பெயர்ஸ்ரோ தனது 7ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். நேற்றைய நாள் ஆட்டம் மழையால் தாமதமாகவே ஆரம்பமானது. இதனால், நேற்றைய நாளில் 65 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டன. ஆட்டத்தின் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு இங்கிலாந்து அணி 258 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பெயர்ஸ்ரோ 103 ஓட்டங்களுடனும், லீச் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் பட் கம்மினஸ், பொலன்ட் தலா 2 விக்கெட்களையும், ஸ்ரார்க், கிறீன், லியோன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும். (ஐ)

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: டீன் எல்கர் அபார ஆட்டம் தென்னாபிரிக்கா வெற்றி!

ஜொகன்னஸ்பேர்க், ஜன. 08

டீன் எல்கரின் அபாரமான துடுப்பாட்டம் கைகொடுக்க இந்திய அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி தற்போது 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது போட்டி கடந்த 3ஆம் திகதி தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 202 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணி 229 ஓட் டங்களைப் பெற்றது.



இரண்டாவது இனிங்ஸில் ஆடிய 266 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி. மூன்றாம் நாள் ஆட்டம் முடிவில் தென்னாபிரிக்க அணி 118 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்திருந்தது.

நான்காம் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டபோதும், உள்ளூர் நேரப்படி மதியத்தின் பின்னர் போட்டி ஆரம்பமானது.

டீன் எல்கர் 46 ஓட்டங்களுடனும், வான் டெர் டுசன் 11 ஓட்டங்களுடனும் நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். இருவரும் இந் தியப் பந்துவீச்சாளர்களை நிதானமாக எதிர்கொண்டனர். எனினும், 40 ஓட் டங்களைப் பெற்ற நிலை யில் டுசன் ஆட்டமிழக்கவே, எல்கர் அரைச்சதம் கடந்து தொடர்ந்து அபாரமாக ஆடினார்.

67.4 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி வெற்றி இலக்கான 240 ஓட்டங்களைக் கடந்தது. அந்த அணி 3 விக்கெட்கள் இழப்புக்க 243 ஓட்டங்க ளைப் பெற்றது.

எல்கர் 96 ஓட்டங்களை யும், தம்பா பவுமா 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் முஹமட் ஷமி, தாகூர், அஸ்வின் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக டீன் எல்கர் தெரிவானார். (ஐ)

## அடிலெய்ட் ரென்னிஸ்: அரையிறுதி போட்டியில் சானியா - நாடியா இணை



அடிலெய்ட், ஜன. 08

அடிலெய்ட் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு சானியா இணை முன்னேறியது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்டில் சர்வதேச ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா, உக்ரைனின் நாடியா இணை அமெரிக்காவின் ஷெல்பை ரோஜர்ஸ், பிரிட்டனின் ஹெதர் வட்சன் இணையை எதிர்கொண்டது.

முதல் செற்றை சானியா இணை 6:0 என கைப்பற்றியது. அடுத்த செற்றை 1:6 என கோட்டை விட்டது. வெற்றியாளரை முடிவு செய்ய நடந்த 'சுப்பர் ரை பிறேக்கரில்' சானியா இணை 10:5 என அசத்தியது.

55 நிமிடங்கள் நடந்த போட்டியின் முடிவில் சானியா ஜோடி 6:0, 1:6, 10:5 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (ஐ)

# எரிவாயு சார்ந்த வெடிப்புகள் வடக்கில் ஏன் நிகழவில்லை?

## இப்படி கேட்கிறார் அமைச்சர் ஜோன்ஸ்டன்

குருநாகல், ஜன. 08

கொழும்பு 7இலோ அல்லது வடக்கிலோ எரிவாயு சார்ந்த வெடிப்புக்கள் இடம்பெறாதது ஏன் என்று தமக்கு சந்தேகம் இருக்கிறது என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார்.



குருநாகலில் பாடசாலை கட்டட திறப்பு விழா ஒன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டொ மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் என்ற ரீதியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் ஒவ்வொரு முறையில் பாரிய சவால்களை எதிர்க்கொண்டு வெற்றிக்கண்டுள்ளோம். கோவிட்-19 வைரஸ் தாக்கம் இலங்கைக்கு மாத்திரமல்ல முழு உலகிற்கும் பெரும் அச்சுறுத்தலாகவே காணப்படுகிறது.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து பொறுப்புடன் செயல்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிறந்த திட்டமிடல் ஊடாக கோவிட் தாக்கத்தை சிறந்த முறையில் வெற்றிக் கொள்ள முடிந்துள்ளது.

சமையல் எரிவாயு கசிவுடனான வெடிப்பு சம்பவம் பிறிதொரு பிரதான பிரச்னையாக காணப்படுகிறது. கொழும்பு ஏழு பகுதியிலும், வடக்கிலும் சமையல் எரிவாயு கசிவுடனான வெடிப்பு சம்பவம் இடம்பெறவில்லை. இருப்பினும் வெவ்வேறு பகுதிகளில் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சமையல் எரிவாயு கசிவுடனான வெடிப்பு சம்பவம் காரணமாக நாட்டு மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளார்கள். இன்னும் இரு வார காலத் திற்குள் இப்பிரச்னைக்கு தீர்வு பெற்றுக் கொள்ள முடியும் - என்றார்.(ஐ)

# சாரதி அனுமதிப் பத்திரம் காலாவதித் திகதி நீடிப்பு!

கொழும்பு, ஜன. 08

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடி காலம் ஆறு மாதங்களால் நீட்டிக்கப்பட்டுள்ளது. காலவதியாகும் நாளிலிருந்து இந்த கால நீடிப்பு நடைமுறையில் இருக்கும் என்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன சட்டத்துக்கமைய போக்குவரத்து அமைச்சு வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில்“2021 ஒக்ரோபர் மாதம் முதலாம் தினத்திலிருந்து 2022 மார்ச் மாதம் 31 ஆம் திகதி இறுதிவரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சகல சாரதி அனுமதிப் பத்தரங்களினதும் செல்லுப்படியாகும் காலம் காலாவதியான தினத்திலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தனியார் துறையினருக்கும் ரூ. 5,000 கொடுப்பனவு வழங்குக!

## அமைச்சர் நிமலிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 08

5000 ரூபாய் கொடுப்பனவை தனியாருக்கு வழங்குவதற்கான வரவு - செலவுத் திட்ட சலுகைச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருமாறு தொழில் அமைச்சரிடம் முன்னணி தொழில் சங்கத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனியார் துறைக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாட்டின் முன்னணி தொழில்சங்கத் தலைவர்களை கலந்துரையாடலுக்கு வரவழைத்திருந்தார்.

நேற்று தொழில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே தொழில் சங்கத் தலைவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ரூ. 5,000 கொடுப்பனவை வழங்குவதற்குத் துரித நடவடிக்கை எடுத்தமைக்காக இலங்கை தொழில்சங்க சம்மேளனத்தின் செயலாளர் லெஸ்லி தேவேந்திரா, தொழிலாளர் அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

ஆனால், இந்தக் கொடுப்பனவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதுள்ள முத்தரப்பு தோழமையைப் பாதுகாக்கக் கவனம் செலுத்த வேண்டும். குறித்த கொடுப்பனவுகளை முதலாளிகள் வழங்க இணங்காவிட்டால் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்து தனியார் துறையினருக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

இந்த உலகளாவிய நெருக்கடியை எதிர்கொண்டு, கோவிட் காலத்தில் நாங்கள் நல்லெண்ணத்துடன் செயல்பட்டோம். ஆனால் முதலாளிகள் நல்லெண்ணத்துடன் செயல்படவில்லை, உழைக்கும் மக்கள் முதுகில் குத்தினர் என்று அன்டன் மார்கஸ் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்குத் தினக்கூலியுடன் சேர்த்து இந்த 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்க வேண்டும் என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.பி.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில், முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளின் தலைவர்களுடன் அடுத்த வாரம் கலந்துரையாடப்படும் என்றும், அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டு அதன்படி முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் இதன் போது உறுதியளித்தார். (ஐ)

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**

ௐ ☪ ✝





**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை
அர்ச்சனா ஜ்வலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)
075 217 1943

# மரண அறிவித்தல்



தோற்றம்
24
-
01
-
1936

மறைவு
23
-
12
-
201

## இராமலிங்கம் நாகநாதபிள்ளை மருதையினார்

(இளைப்பாறிய பட்டய கணக்காளர்)

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாக கொண்டவருமான இராமலிங்கம் நாகநாதபிள்ளை மருதையினார் அவர்கள் கடந்த 23.12.2021 வியாழக்கிழமையன்று லண்டனில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னார் நெடுந்தீவு காலஞ்சென்ற நாகநாதபிளை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, நாகமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்பு கணவரும், நிமலன், குணாளனின் பாசமிகு தந்தையும், காலம் சென்றவர்களான யாதவராயர், நாகமுத்து மற்றும் பார்வதிப்பிள்ளை, காலஞ்சென்ற மங்களம் ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் குணநாயகம், சொர்ணம்மா, புண்ணியமூர்த்தி, லிங்கநாயகம், கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரேணுகா, நிருபாவின் அன்பு மாமனாரும், மேனகா, பூர்ணிமா, கரன், ஈஸ்வரியின் அருமை பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 09.01.2022 ஞாயிற்று கிழமை லண்டனில் நடைபெறும்.

*கிரியைகள்: காலை 11:00 மணி*
Oshwal Ekta Cente
366A Stag Lane
Kingsbury, London
NW9 9AA

*தகனம்: பி.ப. 02:00 மணி*

Hendon Crematorium
Holders Hill Road
London, NW7 1NB

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஈமக் கிரியைகள், தகனம் நிகழ்வுகளை கீழ்க்காணும் இணையவழி நேரில் காணலாம்.

https://youtu.be/elH8z27xps8

ஐரோப்பா: நண்பகல்12:00 மணி, இலங்கை: மாலை 04:30, பேர்த்: மாலை 07:00, சிட்னி: இரவு 10:00 மணி, நியூயோர்க்: அதிகாலை 06:00 மணி, கலிபோர்ணியா: அதிகாலை 03:மணி, ரொறொன்ரோ: அதிகாலை 06:00

*தொடர்புகளுக்கு:*
**00 44 7803152078 Kunalan@gmail.com**
**00 44 7850473921 maruthainar@btinternet.com**

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## இப்போதைய...

அத்துடன், இந்தியாவை மீறி அமெரிக்காவோ - ஐரோப்பாவோ இங்கு எதையும் செய்யாது என்பதே நடைமுறை என்றும் கூறியுள்ளார்.

டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் நாளை இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ள 'ஸ்பொட் லைற்' நிகழ்வுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள விலையேற்றம், பொருட்கள் தட்டுப்பாடு என நாடு மிக மோசமான பொருளாதார நிலையில் காணப்படுகின்றது. இந்தவேளையில் புதிய ஆட்சிமாற்றம் ஏற்படும் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது இதுபற்றி உங்கள் கருத்து என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்,

"புதிய ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படப்போகிறது என்று கண்டவுடனேயே பதவியில் இருப்பவர்கள் இராணுவ ரீதியாக நாட்டைக் கைப்பற்ற முனைவார்கள். ஆகவே இந்த ஆட்சியை கவிழ்க்க முடியாது. கவிழ்க்க நடவடிக்கை எடுத்தால் அவர்கள் இராணுவ ரீதியாக கைப்பற்ற முனைவார்கள்.

இதனால்தான் சிலர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை முன்னிறுத்தி இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துக் கொண்டிருக்கின்றனர். தற்போதைய நிலையில் மக்கள் வெறுப்பைத் தெரிவித்தாலும், நாடு வங்குரோத்து நிலையை அடைந்தாலும் சர்வதேச ரீதியாக - பல இடங்களில் இருப்பது போன்று நாட்டை உடனடியாக இராணுவம் கையேற்கக்கூடிய சாத்தியம் உள்ளது.

இந்த அரசாங்கத்தை வீழ்த்தினால் நாங்கள் ஆட்சிக்கு வரலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் இலவு காத்த கிளிகளாகத்தான் இருப்பர். அரசு கவிழ்ந்தால் உடனேயே அது இராணுவ அரசாங்கத்துக்கே வழிவகுக்கும்." - என்று பதிலளித்தார்.

புதிய அமெரிக்க தூதுவரின் வருகையையும் - இந்தியப் பிரதமருக்கான கடிதத்தையும் மையமாக வைத்து பல கருத்து பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றன அவை தொடர்பில் உங்கள் கருத்து என்ன? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த விக்னேஸ்வரன் எம். பி.,

இந்தியாவுக்கு எதிராக அமெரிக்காவோ அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளோ எதுவும் செய்யாது. வல்லரசு ஒன்று பக்கத்தில் இருக்கும்போது இங்கு வந்து ஏதாவது செய்வது என்றால் அது தங்களுக்கு பாதிப்பு என்று அவை கருதும். அதைவிட, இந்த நாடுகள் ஜனநாயக முறைமைக்கு அடிபணிந்தவை என்பதால் ஒருவருக்கு ஒருவர் முரண்பாடாக பார்க்க மாட்டார்கள். ஆனால், இந்தியாவுக்கு - அமெரிக்காவுக்கு - ஐரோப்பாவுக்கு தனியான சிந்தனைகள் இருக்கக்கூடும். இது சம்பந்தமாக அவர்கள் எந்த நடவடிக்கையை - யார் எடுத்தாலும் அவர்கள், இந்தியாவின் கருத்தை அறிந்து கொண்டே நடவடிக்கையை எடுக்க வேண்டியிருக்கும்.

எங்களின் சில தலைவர்களுக்கு அல்லது தலைவர்களாக வந்திருப்பவர்களுக்கு இந்தியாவை பிடிக்காது. அவர்களுக்கு அமெரிக்காவுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கக்கூடும். ஆனால், நடைமுறையில் இந்தியாவுக்கு எதிராக எதையும் செய்ய முடியாது - என்றார். (ஐ)

## உயர்நீதிமன்றம்...

எதிர்ப்பு தெரிவித்தும் தமக்கான நீதி கோரியும் இளைஞர்களின் குடும்பத்தவர்கள் நேற்று போராட்டம் ஒன்றை நடத்தினர்.

உயர்நீதிமன்றம் முன்பாக நேற்று காலை 8.30 - 10.30 இந்தப் போராட்டம் அமைதிவழியில் இடம்பெற்றது.

இதன்போது, கருத்துத் தெரிவித்த அவர்கள்,"பதினொருபேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் பல வருடங்களாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனூடாகத் திரட்டப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் முன்னாள் கடற்படைத் தளபதி உள்ளடங்கலாக 14 பேருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்னாள் சட்டமா அதிபரால் தீர்மானிக்கப்பட்டது. எனவே, இந்தத் தீர்மானம் வெறுமனே தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல.

எனவே, இந்த விவகாரத்தில் சட்டமா அதிபர் அரசியல் ரீதியான அழுத்தங்களுக்குக் கட்டுப்பட்டு, முதுகெலும்பின்றிச் செயல்பட்டிருக்கின்றார். ஏற்கனவே புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு எதிரான வழக்குகளிலிருந்து அவர்களை விடுவிக்கவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

எனவே, அதன் ஓரங்கமாகவே தற்போதைய நிகழ்வுகளை நோக்கவேண்டியிருக்கின்றது. உரிய விசாரணைகள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், அவற்றிலிருந்து சட்டமா அதிபரால் இலகுவாக விடுதலை செய்யப்படுவார்களாயின் சட்டமும் நீதிமன்றமும் எதற்கு என்ற கேள்வி எம் மத்தியில் எழுகின்றது. நாட்டின் சட்டம் சஞ்சய் ராஜரத்னத்தினால் மீறப்படுமாயின், அச்சட்டத்தின் பயன் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

கடந்த 2008ஆம் ஆண்டு, கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கப்பம் பெறும் நோக்கில் 5 மாணவர்கள் உள்ளடங்கலாக 11 பேர் கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்று 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படவில்லை. இந்த சம்பவத்துடன் குற்றவாளிகளாக சந்தேகிக்கப்பட்ட முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொட உள்ளடங்கலாக கடற்படை அதிகாரிகள் 14 பேருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கான தீர்மானம் முன்னாள் சட்டமா அதிபரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், வசந்த கரன்னாகொடவிற்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்குத் தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் தீர்மானித்துள்ளதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தடுப்பூசி...

சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இதன்மூலம் அடுத்த சில வாரங்களில் விரைவாக மக்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியை வழங்க முடியும் என்று சுகாதார அமைச்சர் கூறினார்.

இலங்கை ஒலிபரப்பாளர் மன்றத்துடன் சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் இலக்கு மக்கள் தொகையில் 28 வீதம் பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் மிக அதிக சதவீத தடுப்பூசியை வழங்குவதே இலக்கு.

நாட்டில் தடுப்பூசி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இம்மாதம் 29ஆம் திகதியுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளதாகவும் அக்காலப்பகுதியில் சுமார் 45 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கியூ. ஆர். குறியீட்டுடன் கூடிய தடுப்பூசி அட்டை மற்றும் செயலி விரைவில் வழங்கப்படும் என்றும், அந்த அட்டைக்கு முழு தடுப்பூசியில் பூஸ்டர் தடுப்பூசியும் சேர்க்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## அமைச்சர்...

கிழமை இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவிருந்தார்.

மல்வானையில் உள்ள வீடு மற்றும் காணி தொடர்பிலான வழக்கு இன்று கம்பஹா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றத்தில் ஆஜராக வருகை தந்திருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடம் ஊடகவியலாளர்கள் இந்திய பயணம் குறித்து கேள்வி எழுப்பினர்.

இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரித்திருப்பதால், தற்போது அங்கு செல்ல முடியாது என பஸில் ராஜபக்ஷ இதன்போது பதிலளித்தார்.

## தமிழில் உரையாற்ற...

அல்லது எனது ஆசிரியர்களோ காரணமல்லர். சுதந்திரத்துக்குப் பின் வந்த கொள்கை வகுப்பாளர்களே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என வெகு சன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

கல்முனை முஹ்யித் தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற 200 ஆவது கொடியேற்ற விழாவை யொட்டி முத்திரை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை சுதந்திரம் பெற்ற போது 1948 ஆம் ஆண்டு சுதந்திர சதுக்கத்தில் வைத்து உரையாற்றிய டி.எஸ். சேனநாயக சகோதர தமிழ் மொழியையும் தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தியிருந் தால் 30 வருட கால கொடூர யுத்தத்தையும் தவிர்த்திருக்கலாம். இருப்பினும் இப்போது கடந்த வரலாறுகளைப்பேசி ஒன்றும் ஆகப்போவதில்லை.

நான் அரசியல்வாதியாக முதன் முதலில் கிழக்கு மாகாணத்துக்கு வருகை தந்தது நாட்டில் கொழும்பு உட்பட வடக்கு- கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்திருந்த 2005 ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோடு அக்கரைப்பற்றுக்கு வந்தது தான்.

அப்போது அரசியல்வாதிகளும் முப்படைத்தளபதிகளும் பங்கர்களில் பதுங்கியிருந்த காலம். அப்போது மஹிந்த அக்கரைப்பற்றில் வைத்து மக்களுக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத் தைக் கொண்டு வருவதாக வாக்குறுதி யளித்து அதை நிறைவேற்றியும் காட்டினார். சுதந்திரத்திற்குப் பின் ஆட்சிக்கு வந்த சகல கட்சிகளும் இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்தே ஆட்சிக்கு வந்தன. இதன் விளைவு இதற்கான வட்டியையே நாம் இப்போதும் செலுத்திக்கொண்டிருக்கின்றோம்-என்றார். (அ)

## இலங்கையுடனான...

இலங்கை அந்நிய செலாவணி நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் இந்தியாவின் முக்கிய வங்கிகள் இலங்கையுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுகின்றனர் மிகவும் அவதானமாக தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கடன்பத்திரத்தை ஏற்றுக்கொள்வதில் வங்கிகள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுகின்றன என தெரிவித்துள்ள 'எக்கனமிக் ரைம்ஸ்' ஏனைய வங்கிகள் ஏற்றுமதியாளர்களின் நிலை தொகை கடன் காலம் மற்றும் கடன் பத்திரங்களை வழங்கும் வங்கிகளின் நிலை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து கடன்பத்திரத்தை வழங்குகின்றன எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையால் தற்போது உருவாகியுள்ள நெருக்கடிக்கு தீர்வை காணமுடியும் என வங்கியாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்

டிசெம்பர் மாத இறுதியில் இலங்கையின் அந்நிய செலாவணி ஒரு மாத இறக்குமதிக்கு போதுமானதாக காணப்பட்டது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஏற்றுமதியாளர்களின் ஆவணங்கள்மீது நாங்கள் முழுமையான தடையை விதிக்கவில்லை கடன்பத்திரத்தை வழங்கும் வங்கிகளின் நிலையை அடிப்படையாக வைத்து இதனை முன்னெடுக்கின்றோம் என 'ஸ்டேட் பாங் ஒவ் இந்தியா'வின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2020இல் இலங்கைக்கான இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 32 இலட்சம் டொலராக காணப்பட்டது எனவும் 'எக்கனமிக் ரைம்ஸ்' தெரிவித்திருக்கிறது.

## வீடுடைத்து நகை, பணம் களவு

மன்னார், ஜன. 08

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூர்வீதி, குருசு கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு, இனம் தெரியாத நபர்களினால் வீடு உடைக்கப்பட்டு, திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டின்ஆட்கள் இல்லாத நிலையில், வீட்டின் கதவை சூட்சுமமான முறையில் திறந்து, வீட்டில் இருந்த நகை, பணம் மற்றும் மடிக்கணனி உட்பட பல பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.மன்னார் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## கொரோவால்...

அடங்குவர்.

இந்த மரணங்களின் எண்ணிக்கையுடன் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து99 ஆக உயர்ந்துள்ளது என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்தது. (ஐ)

## எமது அரசு...

திபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், "அரசமைப்பின் பிரகாரம் எனது அமைச்சரவையை 30 அமைச்சர்களாக மட்டுப்படுத்துவேன் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

மொனராகலை சியம்பலாண்டுவை மகா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தும் வேலைத்திட்டம், நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஒரே குழுவாக இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அனைத்து பின்னடைவுகளையும் குழுவாக நிவர்த்தி செய்வது கூட்டுப் பொறுப்பாகும்.

குறைபாடுகளை மாத்திரம் விமர்சித்தால் அது குறித்த நபரின் திறமையின்மையையே வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், மக்கள் சார்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பது எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை.

அரசமைப்பின் பிரகாரம் எனது அமைச்சரவையை 30 அமைச்சர்களாக மட்டுப்படுத்துவேன். அமைச்சரவையில் கூடுதல் உறுப்பினர்களை இணைத்து வாக்குறுதியை மீறப் போவதில்லை என்றும் இதன் போது ஜனாதிபதி தெரிவித்தார்.

## நல்லிணக்கம்...

மேற்கண்டவாறு கூறினார்.

நாங்கள் பட்டறிவின் மூலம் பலதையும் கற்றுக் கொள்ள வேண்டும் ஆரம்பத்தில் எங்களுக்கு ஓர் ஆயுதப் போராட்டத்தின் தேவை இருந்தது. அது இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகத்தான் எங்கள் பிரச்சனைகளை தீர்க்கலாம் என்பதை முன்வைத்து நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

விரும்பியோ விரும்பாமலோ, சுயலாப அரசியலுக்கோ அல்லது பயம் காரணமாகவோ அவர்களைப் பின்பற்றியதன் விளைவாக இருக்கின்ற நிலைமைகளை இல்லாமல் செய்து விட்டார்கள். ஆனபடியால் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இதற்கு தமிழ் மக்கள் நிறைய பலியாக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள்.

இந்த நிரந்தரமான சமாதானத்தை கொண்டு வந்ததற்கு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அப்போதைய பாதுகாப்பு செயலரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## எளிமைமிகு பரிபாலக ஆளுமை நூல் நேற்று வெளியிடப்பட்டது!





யாழ்ப்பாணம், ஜன. 08

வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் எழுதிய நல்லூர் கந்தசுவாமி ஆலய பரிபாலகர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் பற்றிய கைநூலான எளிமைமிகு பரிபாலக ஆளுமை என்ற கைநூல் நேற்று வெளியிடப்பட்டது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நூலை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வெளியிட்டு வைக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தொண்டர் கண்ணன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில், நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச. லலீசன் ஆகியோர் விருந்தினர்களாக பங்கேற்றனர்.

நிகழ்வில் சைவப் பெரியார் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் சுகாதார விதிகளை பின்பற்றி கலந்துகொண்டனர். பங்கேற்ற அனைவருக்கும் கைநூல் இலவசமாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 3,200 சிறுவர்கள் துஷ்பிரயோகம்!

கொழும்பு, ஜன. 08

கடந்தாண்டு 3,200 சிறுவர்கள் பல்வேறு வகையான துஷ்பிரயோ கங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நேற்று தெரிவித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோ கம், தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகள் தொடர் பான பெரும்பாலான சம்பவங்கள் கொழும்பு, கம்பகா மற்றும் களுத் துறை மாவட்டங்களில் பதிவாகியுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி காரசபையின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் எமது சமூகத்தில் பொது வாக காணப்படுவதாகவும், ஆனால், அது மிகவும் அரிதாகவே பதிவாகியுள்ள தாகவும் சுட்டிக்காட்டிய அவர், சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் அவர்கள் நன்கு அறிந்திருந்தும், சில நபர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்றும் அவர் சாடினார்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ)





# திருமலை பெரியகுளம் பகுதியில் விகாரை அமைப்பதற்கு முயற்சி!

### எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

திருமலை, ஜன. 08

**திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை ஒன்றை அமைப் பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை ஒன்றை அமைப்பதற்காக அந்தப் பகுதியில் அமைந்துள்ள கடைகளை அகற்றித் தருமாறு உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் பௌத்த துறவி ஒருவரால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸார் அந்தக் கடைகளை அகற்றுமாறு அறிவுறுத்தினர். இதனை அடுத்து ஒன்று திரண்ட அப் பகுதி வாசிகள் போராட்டத்தை முன் னெடுத்தனர்

இந்தப் போராட்டத்தில் பொது மக்களோடு இணைந்து பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளபோது அரசு இவ்வாறான திட்ட மிட்ட குடியேற்றங்களை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பரவலான பெரும்பான்மையினக் குடியேற்றங்களை நிறுவுவதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற் பாடுகளை வன்மையாக கண்டிக்கிறோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ)

## 7 மாதமாக மகனின் மரணத்துக்கு நீதி வேண்டி அலைகிறார் தந்தை!

மட்டக்களப்பு, ஜன. 08

மகன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு இன்று 7 மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எந்த விதமான அறிக்கைகளும் பொலிஸாரினால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டு வாசலுக்கு முன்னால் சுட்டுக் கொல்லப்பட்ட பாலசுந்தரத்தின் தந்தை ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டு வாசலுக்கு முன்பாக கடந்த ஜூன் மாதம் 3ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த பாலசுந்தரத்தின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த வழக்கில் சந்தேக நபரை இம்மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக உயிரிழந்த பாலசுந்தரத்தின் தந்தை தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை ஏறாவூர் பொலிஸார் விசாரணை செய்து அறிக்கை வழங்கப்படாத காரணத்தால் மீண்டும் குறித்த துப்பாக்கிச்சூட்டு விசா ரணை சுரடியனாறு பொலிஸாருக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாங்கள் அலைந்து திரிகின்றோம்.

விசாரணையின்போது நீதிபதி, துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில் எந்த துப்பாக்கியால் பாலசுந்தரம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸாரிடம் வினவியபோது, எந்த துப்பாக்கி யால் சுட்டது என்பது தெரியாது என்று பொலிஸார் தெரிவித்தனர். சுட்ட துப்பாக்கி எதுவென்று தெரியாத ஒருவருக்கு எவ்வாறு துப்பாக்கியை வழங்கினார்கள் என்பது வேத னைக்குரிய விடயம். இதனால் தான் இவ்வாறான சம் பவங்கள் நடைபெறுகின்றன.

கைத்துப்பாக்கியால் சுட்டாரா அல்லது பெரிய துப்பாக்கியால் சுட்டாரா என்று கூட தெரியாத அளவுக்கு மட்டக் களப்பு பொலிஸார் நடந்து கொள்ளும் விதம் மிகவும் வேதனை அளிக்கிறது. எங்களது மகனின் கொலைக்கான நீதியை மறைப்பதற்கு பொலிஸார் முயற்சிக்கின்றனர்.

எது எவ்வாறாக இருந்தாலும் மகன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு இன்று 7 மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எந்த விதமான அறிக்கைகளும் பொலிஸாரினால் மன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை - என்றார். (அ)

## மட்டு. சிவானந்தா வித்தியாலய அதிபரின் அலுவலகம் முற்றுகை!

### 3 ஆசிரியர்கள் திடீர் இடமாற்றத்தை கண்டித்து

மட்டக்களப்பு, ஜன. 08

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட் பட்ட கல்லடி, உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை அதிபரின் அலுவல கத்தை முற்றுகையிட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் கற்பித்தல் செயற் பாடுகளில் ஈடுபட்ட மூன்று ஆசிரியர் கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டதைக் கண்டித்து இந்த முற்றுகைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் பாடசாலையில் நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பாட சாலையை மூடியதைக் கண்டித்தும் ஆசிரியர்களுக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டித்தும் ஆசிரியர்கள் போராட்டம் நடாத்தியிருந்தனர்.

அந்தப் போராட்டத்தில் முன்னிலையாக செயற்பட்ட மூன்று ஆசிரியர்க ளுக்கே இந்த திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

முறையற்ற வகையில் அதிபர் செயற் படுவதுடன் இவ்வாறான இடமாற்றங் களுக்கு அவர் துணைபோவதாக தெரிவித்தே ஆசிரியர்களும் இந்த முற்றுகைப் போராட்டத்தில் இணைந் தனர்.

இதன்போது காத்தான்குடி பொலிஸார் வருகை தந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தபோதும் அதனை புறக் கணித்து தொடர்ச்சியான போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டம் காரணமாக மாண வர்களின் கல்வி நிலை முழுமையாக பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- சண்டைக்கோழி
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்




5.00 மணி : கோலிவூட் சுப்பர்-10-2021 இன் சிறந்த திரைப்படங்களின் தரவரிசை
6.00 மணி : எதுசரி எதுபிழை

இரவு
07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிலி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு